# ஹாஸ்யக் கதைகள்

700

ராவ்பஹதூர்

## ப. சம்பந்த முதலியார், பி.ஏ., பி.எல்.,

அவர்களால் இயற்றப்பட்டது.

இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்றத் தமிழ் நூல்கள்:—

லீலாவதி-சுலோசனை, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள், நற்குல தெய்வம், மனோஹரன், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், கள்வர் தலைவன், தாசிப்பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், சதி சுலோசனை, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, உத்தமபத்தினி, அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றாம் பாகம், சபாபதி நான்காம் பாகம், வள்ளிமணம், பேயல்ல பெண் மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனா, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு, சுல்தான்பேட்டை சப் அசிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், விக்ரமோர்வசி, முற்பகற் செய்யின் பிற்பகல் விளையும், நாடகமேடை நினைவுகள் முதற்பாகம், இரண்டாம் பாகம், மூன்றாம் பாகம், நான்காம் பாகம், நாடகத் தமிழ், யயாதி, பிராம்மணனும் சூத்திரனும், வாணீபுர வணிகன், இரண்டு நண்பர்கள், சத்ருஜித், ஹரிச்சந்திரன், மார்க்கண்டேயர், ரத்னாவளி, கண்டு பிடித்தல், கோனேரி அரசகுமாரன், சந்தையிற் கூட்டம், குறமகள், வைகுண்ட வைத்தியர், தீட்சிதர் கதைகள், முதலியன.

முதற் பதிப்பு

சென்னை 'பியர்லெஸ்' அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது.

THE TANJORE MAHARAJAH SERFOGI'S SARASWATHI MAHAL LIBRARY
1936
RECEIVED.
JAN. 1950
TANJORE

காபிரைட்] [விலை அணா. 8

INSCRIBED

to

THE BELOVED MEMORY

of

MY PARENTS

**P. VIJIARANGA MUDALIAR**

and

**P. MANICKAVELU AMMAL**

and

MY FRIEND

**C. RANGAVADIVELU**

# ஹாஸ்யக் கதைகள்

## சபாபதி முதலியார் கதைகள்

### முதற் கதை.

சபாபதி முதலியாருக்கு ஐந்து வயதாரம்பமானவுடன் அவரது தாய் தந்தையர் அவருக்கு வித்யாரம்பம் செய்வித்துத் தங்கள் வீட்டிற்கு அருகிலிருந்த ஒரு தெருப்பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினார்கள். அவர் பள்ளிக்கூடத்திற்கு அடிக்கடி நாழிகை கழித்துப் போவார். உபாத்தியாயர் "ஏன் இப்படி காலம் கழித்து வந்தாய்?" என்று வினவினால், தினம் ஒரு விதமாகப் போக்கு சொல்லி தப்பித்துக்கொள்வார். ஒரு நாள் அதிக காற்றுமழை அடித்தது. அன்றைத் தினம் பள்ளிக்கூடத்திற்கு அதிக நேரம் கழித்துப் போனார். உபாத்தியாயர் கோபங்கொண்டு "ஏன் இன்று இவ்வளவு நேரம் பொறுத்து வந்தாய்?" என்று கேட்க, "நான் என்ன செய்வது ஐயா, இந்தக் காற்று மழையில் பள்ளிக்கூடத்திற்குவர, ஒரு அடி எடுத்து வைத்தால், இரண்டடி பின்னால் தள்ளுகிறது" என்று பதில் உரைத்தார். "அது வாஸ்தவமாயின், இப்பொழுது பள்ளிக்ளிக்கூடத்திற்கு என்னமாக வந்து சேர்ந்தாய்?" என்று அவர் கேட்க, "அதற்கு நான் ஒரு யுக்தி செய்தேன், பள்ளிக்கூடத்திற்கு வருவதற்காக வீட்டுப் புறமாக நடக்க ஆரம்பித்தேன், அந்தப்பக்கம் ஒரு அடி எடுத்து வைத்தவுடன், இரண்டடி பள்ளிக் கூடத்தின் பக்கம் தள்ளியது, இம்மாதிரியாகவே ஒவ்வொரு அடி எடுத்து வைக்க பின்பக்கமாக இரண்டிரண்டடியாகத் தள்ளிக்கொண்டு வந்து பள்ளிக்கூடத்தில் என்னை விட்டது!" என்று பதில் சொன்னார். இதைக்கேட்ட உபாத்தியாயர், கோபம் நீங்கி நகைத்தவராய், "இந்த யுக்திக்காக உன்னை மன்னித்தேன்! போ!" என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

## இரண்டாம் கதை.

சபாபதி முதலியார் இன்னும் கொஞ்சம் வயதானவுடன் ஹிந்து புரொப் பிரைடரி ஸ்கூல் என்னும் பாடசாலையில் போய்ச் சேர்ந்தார். அந்தப் பள்ளிக்கூடம் பெரியமனிதர்களுடைய பிள்ளைகள் படிப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டது. மற்றப் பள்ளிக் கூடங்களிலிருப்பதைவிட மாச சம்பளம் அதிகம், உபாத்தியாயர்களும் பாடம் சரியாகச் சொல்லிக்கொடுப்பதில்லை, பிள்ளைகளும் பாடம் படிப்பதில்லை. இப்படிப்பட்ட பணக்காரப் பள்ளிக்கூடத்தில் நமது செல்லப்பிள்ளை சபாபதி முதலியார் படிக்கும்பொழுது ஒரு முறை கார்த்திகை தீபம் சமீபித்தது; அக்காலம் பட்டாணி டபாஸ் என்று ஒன்றிருந்தது; சிறு ஈயதுண்டுகளுடன் வெடி மருந்து சிறிது வைத்து காகிதத்தில் சுற்றியிருக்கும். அதை வேகமாய்க் கீழே போட்டால் 'டப்' என்று வெடிக்கும். இதை நம் முதலியாரும் இன்னும் சில பிள்ளைகளும் வாங்கி ஜேபியில் வைத்துக்கொண்டு அவர் படித்தவகுப்பின் உபாத்தியாயர் பாராதிருக்கும் பக்கமாய், மாற்றி மாற்றி அடித்துக்கொண்டிருந்தார்கள். இதைக்கண்டு ஆற்றுதவராய், உபாத்தியாயர் பாடத்தை நிறுத்தி ஒவ்வொரு பிள்ளையினுடைய ஜேபியையும் பரிசோதனை செய்து அவர்கள் வைத்திருந்த பட்டாணி டபாசுகளையெல்லாம் வாங்கி ஒரு பொட்டலமாகக் கட்டி தன் ஜேபியில் போட்டுக்கொண்டு வீடு போய்ச் சேர்ந்தார். பிறகு சாயங்காலம் அவர் வழக்கப்படி பரணி தீபத்திற்காக கந்தசாமி கோயிலுக்குப் போனார். இந்த சமயம் பார்த்துக்கொண்டிருந்த சபாபதி முதலியார் தன் வகுப்பு மாணவன் ஒருவனை உபாத்தியாயர் வீட்டுக்கனுப்பி, "உபாத்தியாயர் சாயங்காலம் கொண்டு வந்து கொடுத்த பொட்டலத்தை வாங்கி வரச் சொன்னார்" என்று சொல்லி அவரது மனைவியிடமிருந்து அதை திரும்ப வாங்கிக்கொண்டு வந்து விட்டார். வீட்டிற்கு வந்தவுடன் உபாத்தியாயர், நடந்த செய்தியைக் கேள்விப்பட்டு என்ன செய்வார் பாபம்! இதை வெளிப்படுத்தினால், தான் பிள்ளைகளிடமிருந்த பட்டாணி டபாசுகளை வீட்டிற்குக் கொண்டுபோய்க் கொடுத்தது வெளியாகப் போகிறதென்று சும்மா இருந்து விட்டார். மறுநாள் கார்த்திகை விடுமுறை கழித்து உபாத்தியாயர் பள்ளிக்கு

வருமுன், சபாபதி முதலியார் அரைமணி முன்னதாகவே பள்ளிக்கூடத்திற்குப் போய், அங்கு வகுப்பிலிருந்த கறுப்பு போர்டில் (Black board) மேல்பக்கம் ஓரமாக அந்த டபாசுகளை யெல்லாம் வரிசையாக ஜாக்கிரதையாக வைத்து விட்டார். பிறகு உபாத்தியாயர் வகுப்பிற்கு வந்து கணக்கு பாடம் ஆரம்பித்து, பிள்ளைகளுக்குக் கொடுத்த கணக்கை கறுப்பு போர்ட்டில் சாக்கைக் கொண்டு எழுதுவதற்காகப் போர்டண்டை போய் சாக்கைக்கொண்டு அதன் பேரில் எழுத ஆரம்பித்தபொழுது, அந்தக் கறுப்பு போர்டானது, சாக் பட்டமாத்திரத்தில் பின்புறம் சாய, அதன்பேரில் வைத்திருந்த பட்டாணி டபாசுகளெல்லாம் படபடபட வென்று வெடித்தன! உபாத்தியாயருக்கு அதிகக் கோபம் பிறந்து யார் இதைச் செய்தது என்று விசாரித்ததும், சபாபதி முதலியாரும், அவர்களுடன் படித்த பிள்ளைகளும் தங்களுக்கு ஒன்றும் தெரியாதென்று சாதித்தனர். அதன் பேரில் உபாத்தியாயர் சபாபதி முதலியாரைப்பார்த்து "சபாபதி, நீ எப்பொழுதும் உண்மை பேசுபவன், இந்த பட்டாணி டபாசு யாருடையது சொல்லி விடு" என்றார். அதற்கு சபாபதி முதலியார் "ஸார், இந்த பட்டாணி டபாசுகளெல்லாம் ஒருவருடையதுமல்ல, யார் அந்த சொத்துக்காரர்களோ, அவர்களுக்கு இந்த பாபம் ஆகட்டும்!" என்று பதில் உரைத்தார்.

## மூன்றும் கதை.

பிறகு சபாபதி முதலியார் பச்சையப்பன் கலாசாலைக்குப் போய் படிக்க ஆரம்பித்தார். அச்சமயம் வெங்கட சுப்பாராவ் என்பவர் ஒருவர், பிள்ளைகள் படிக்க வேண்டிய, ஆங்கிலம், கணிதம், பூகோளம், சரித்திரம் முதலிய புஸ்தகங்களுக்கெல்லாம் "ஆங்கிலம் சுலபமாக்கப்பட்டது" (Made easy) "கணிதம் சுலபமாக்கப்பட்டது" "பூகோளம் சுலபமாக்கப்பட்டது," "சரித்திரம் சுலபமாக்கப்பட்டது" என்று பெயர் வைத்து சில புஸ்தகங்களை அச்சிட்டார். இவைகளை யெல்லாம் அவரது நண்பராகிய சபாபதி முதலியார் வகுப்பு உபாத்தியாயர் தன் வகுப்புப் பிள்ளைகள் வாங்கிப்படிக்கும்படி நிர்ப்பந்தித்தார். சபாபதி முதலியார், உபாத்தியாயர் இவ்வாறு நிர்ப்

பந்திப்பது தவறு என்று எடுத்துக்காட்டவேண்டி, ஒருநாள் மத்தியானம் தான் வழக்கமாய் அணியும் பூட்ஸ் (Boots) களைக் கழற்றி விட்டு, பாதத்தளவு இரண்டு வாழைப்பட்டைகளை துண்டித்து, பாதத்தில் அவைகளை வாழை நாரைக் கொண்டு கட்டிக்கொண்டு வகுப்புக்குள் மத்தியான மணியடித்து, உபாத்தியாயர் வந்து உட்கார்ந்த பின், பட் பட் என்று வாழை மட்டைகள் காலில் ஓசை செய்ய, நுழைந்து தான் உட்காரவேண்டிய இடத்திற் போய் உட்கார்ந்தார். வகுப்புப் பிள்ளைகளெல்லாம் 'கொல்' என்று சிரித்தனர். உபாத்தியாயருக்கு அதிக கோபம் பிறந்து "சபாபதி! இப்படிவா" என்று அவரைத் தன்னிடம் அழைத்து, "காலில் இது என்னடா?" என்று வினவினர். அதற்கு சபாபதி முதலியார் "இது பூட்ஸ் (Boots) சுலபமாக்கப் பட்டது" என்று விடைபகர, மறுபடியும் வகுப்புப் பிள்ளைகளெல்லாம் கொல் என்று நகைத்தனர். அதன் பேரில் உபாத்தியாயருடைய முகமானது சந்தோஷத்தினல் அகன்று காட்டவில்லை என்று மாத்திரம் நாம் கூறக்கூடும். அன்று முதல் அவர் தன் வகுப்புப் பிள்ளைகளை அந்த "சுலபமாக்கப்பட்டது" என்றபுஸ்தகங்களை வாங்கும்படி நிர்ப்பந்திப்பதை விட்டனர்.

## நான்காம் கதை.

பச்சையப்பன் பள்ளிக்கூடத்தில் முனிசாமி ஐயர் என்று ஒரு உபாத்தியாயர் இருந்தார். அவர் ஒருமுறை வகுப்புப் பரீட்சையில், பள்ளிக்கூடத்து டெபுடி இன்ஸ்பெக்டர் மகனுக்கு, கணிதத்தில் ஒரு கேள்வி சொல்லிக் கொடுத்ததை சபாபதி முதலியார் கண்டு பிடித்து விட்டார். அதன் பேரில் கோபங்கொண்டவராய் இவருக்கு எப்படியாவது பிராயச்சித்தம் செய்து வைக்கவேண்டுமென்று வழி பார்த்திருந்தார். இந்த உபாத்தியாயருக்கு அந்த டெபுடி இன்ஸ்பெக்டருடைய மகன், தினம் ஒருதுட்டுக்கு மூக்குத்தூள் பொடி மட்டையில் வாங்கிக்கொண்டு வந்து கொடுப்பது வழக்கம். உபாத்தியாயர் வருமுன் அவரது மேஜையின் அறையில் அதை வைத்துவிடுவான். பிறகு உபாத்தியாயர் வகுப்புக்கு வந்தவுடன், பாடம் ஆரம்பிக்குமுன், அந்த அறையைத் திறந்து ஒரு சிட்டிகை

பொடியைப் போட்டுக்கொண்டு பிறகு பாடம் நடத்துவது வழக்கம். சபாபதி முதலியார் சமயம் பார்த்திருந்து, ஒரு நாள் வழக்கம்போல் அந்த டெபுடி இன்ஸ்பெக்டர் மகன் வைத்துவிட்டுப்போன பொடி மட்டையை எடுத்து அதில் இருந்த பொடியையெல்லாம் வீதியில் கொட்டிவிட்டு, தான் கொண்டுவந்த, பாதிபாகம் பொடிசெய்த மிளகுத்தூள் மிளகாய்த் தூள் கலந்த பொடியை அதில் வைத்து, பழையபடி பொடிமட்டையை ஒருவருமறியாதபடி மறைத்துவைத்து விட்டார். கொஞ்சம் பொறுத்து 10 மணி அடித்துவிட பிள்ளைகளெல்லாம் வகுப்பில் வந்து சேர்ந்தனர். உபாத்தியாயர் தன் நாற்காலியில் உட்கார்ந்து மேஜையைத் திறந்து அங்கிருந்த பொடிமட்டையில் வைத்திருந்த பொடியை ஒரு பெரிய சிட்டிகை யளவு மூக்கில் வேகமாய் இழுத்தவுடன், மிளகு காரத்தினாலும் மிளகாய் காரத்தினாலும் பத்து பதினைந்து தரம் தும்பி, கண்களில் நீர் சொரிய, "இதைச் செய்தது யார்?" என்று கேட்க பயந்தவராய் சும்மா இருந்து விட்டார்.

## ஐந்தாம் கதை.

சபாபதி முதலியார் உபாத்தியாயர்களில் கணிதவாத்தியார் மிகவும் கோபிஷ்டி. பிள்ளைகளின் மீதுகொஞ்சமேனும் தயையில்லாமல் எந்நேரமும் கடிந்துகொண்டும் அல்ப விஷயங்களுக்கெல்லாம் தண்டித்துக்கொண்டும் இருப்பார். பிள்ளைகளெல்லாம் எப்படியாவது இந்த உபாத்தியாயரை ஒரு முறை அவமானப்படுத்த வேண்டுமென்று தீர்மானித்து சபாபதி முதலியாரிடம் போய் முறையிட்டனர். அவரும் பார்த்துக்கொள்வோம் என்று பதில் கொடுத்து விட்டு, கத்திரி விடுமுறைக்காக பள்ளிக்கூடம் கலையும் தினத்தை எதிர்பார்த்திருந்தார். இந்த கணித வாத்தியார் தினம் மத்தியானம் போஜனம் கொண்டபின் ஒரு சுருட்டு பிடிப்பது வழக்கம். இவர் மிகவும் லோபிபாகையால் கடையில் விற்கும் சுருட்டுகளை வாங்குவதை விட்டு, புகையிலையை வாங்கி தானே சுருட்டு செய்து கொள்வார். இந்த சுருட்டை தினம் காலையில் பள்ளிக்கூடத்திற்கு வந்தவுடன் தனது மேஜை (டெஸ்க்) யில் வைப்பது வழக்கம். இதை ஒரு நாள் உபாத்தியாயர் இல்லாத பொழுது எடுத்துப்

பார்த்து எப்படி அந்த சுருட்டை சுருட்டுகிறார் என்பதை நன்றாய் கவனித்துக்கொண்டார் நமது சபாபதி முதலியார். பிறகு விடுமுறை தினம் வந்த பொழுது, உபாத்தியாயர் ஏதோ வேலையாய் வெளியிற் போயிருந்தபொழுது, அவர் வைத்துவிட்டுப்போன சுருட்டை எடுத்துக்கொண்டு, தான் முன்பாகவே தயார் செய்து வைத்திருந்த ஒரு சுருட்டை அந்த இடத்தில் மெல்ல வைத்து விட்டார். அந்த சுருட்டில் நமது முதலியார் ஒரு சூழ்ச்சி செய்திருந்தார்; அதாவது, ஒரு டபாசை யெடுத்து அதன் பேரில் ஜாக்கிரதையாக கணித உபாத்தியாயர் சுற்றுகிறமாதிரி புகையிலையைச் சுற்றி சுருட்டாகச் செய்து வைத்தார். பிறகு கணித உபாத்தியாயர் வழக்கம் போல் மத்தியான போஜனம் கொண்டபின் அறைக்குள் வந்து, தன் மேஜையைத் திறந்து அதிலுள்ள சுருட்டை எடுத்து வாயில் பிடித்துக்கொண்டு ஒரு நெருப்புக்குச்சியினால் அதைப் பற்றவைத்து புகையை இழுத்துக்கொண்டிருந்தார். பாதி சுருட்டானவுடன், உள்ளேயிருந்த டபாசு வத்தியில் நெருப்புப் பிடிக்க, அது புசு புசு என்று எறிந்துகொண்டுபோய் டபாசானது டப்! என்று வெடித்தது! கணித உபாத்தியாயர் பயந்து போனார்! முகத்திலும் கொஞ்சம் காயம் பட்டது. அறைக்கு வெளியில் தனது நண்பர்களுடன் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த நமது முதலியார், உள்ளே ஓடி வந்து "ஐயோ! இது என்னசாமி!" என்று அவருக்கு உபசாரம் செய்தார். உபாத்தியாருக்கு மாத்திரம் சபாபதி முதலியார் பேரில் சந்தேகம்தான், ஆயினும் ஒன்றும் ருசு வில்லாமல் என்ன செய்வார் பாபம்! சும்மா இருந்து விட்டார். அதுமுதல், தான் மத்தியானம் பிடிக்கும் சுருட்டை தன் ஜேபியிலேயே வைக்கும் வழக்க முடையவராயினார்.

## ஆறும் கதை.

கணிதத்தில் நமது சபாபதி முதலியார் வகுப்பில் கடைசி ஸ்தானத்தை விட்டு அகலுவதில்லை; வேப்பங்கனியில் மற்றவர்களுக்கு எவ்வளவு ருசியோ அவ்வளவு அபிருசி யுண்டு இவருக்கு கணிதத்தில். ஒரு நாள் கணக்கில் இரண்டணாவில் எத்தனை தம்பிடி

என்பதைக் கூட தவருகப் போட்டார். அதன் மீது உபாத்தியா யருக்குக் கோபம் பிறந்து "சபாபதி! தம்பிடிக்கு ஒரு மசால்வடை யானால் இரண்டணுவுக்கு எத்தனை மசால்வடை கிடைக்கும்?" என்று கேட்டார். உடனே நமது முதலியார் 32 என்று பதில் உரைக்க "மடையன்! இது கூடவா தெரியவில்லை! நில் பென்சியின் பேரில்" என்று நிற்க வைத்தார். பள்ளிக்கூடத்து ஹெட்மாஸ் டர் அச்சமயம் வகுப்புகளையெல்லாம் சுற்றிப்பார்த்துக்கொண்டு வந்தார். சபாபதி முதலியார் பென்சியின்பேரில் நிற்பதைக்கண்டு, வகுப்பின் உபாத்தியாயரை "பிள்ளையாண்டான் என்ன தப்பு செய் தான்?" என்றுகேட்க, நடந்தசமாசாரத்தை உபாத்தியாயர் எடுத்துச் சொன்னர். அப்பொழுது சபாபதி முதலியார் ஹெட்மாஸ்ட ரைப் பார்த்து "நான் சரியாகத்தான் கணக்கு சொன்னேன் சார்! வாத்தியார் தான் தப்புசார்". என்று முறையிட்டார். அதன் பேரில் "அது எப்படி யப்பா? தம்பிடிக்கு ஒரு மசால்வடையானல் இரண்டணுவிற்கு 24 மசால்வடைதானே!" என்று சொல்ல, "இல்லை சார்! நீங்கள் வேண்டுமென்ருல் இப்பொழுது இரண்டணு என்னிடம் கொடுத்தனுப்புங்கள். 32 மசால்வடை எங்கள் வீட்டின் பக்கத்திலிருக்கும் கடைக்காரன் கொடுக்கிருன் பாருங்கள். தம்பி டிக்கு வாங்கினல் ஒன்றுதான், பைசாவுக்கு வாங்கினல் 4!—ஒன்று கொசறு!—ஆகவே அணுவுக்கு பதினறு, இரண்டணுவுக்கு 32!" என்று பதில் உரைக்க, வகுப்பிலுள்ள பிள்ளைகளெல்லாம் சிரிக்க ஹெட் மாஸ்டரும் சிரித்து விட்டு, "புத்திசாலிதான், சரியாக இனி மேலாவது கணக்குகள் போடு" என்று சொல்லி, அவரை பென்சியி லிருந்து கீழே இறக்கி உட்கார வைத்துவிட்டுப் போனர். அப் பொழுது வகுப்பு வாத்தியார் முகத்தில் சிரிப்பு இல்லை என்று எழுதுவேணுயின் அது உண்மையாகும்.

## ஏழாம் கதை.

ஒரு நாள் சபாபதி முதலியார் அன்றைத்தினம் பாடத்தைக் கொஞ்சமேனும் படித்துக்கொண்டு வரவில்லை என்று கோபங்கொண் டவராய் அவரது தமிழ் உபாத்தியாயர் அவரை தண்டிக்கவேண்டு

மென்று தீர்மானித்தார். சபாபதி முதலியார் தகப்பனர் அச்சமயம் இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ் (Inspector of schools) ஆகயிருந்தார். பிரம்பினால் அடித்தால் பிறகு அவர் தகப்பனருக்குக் கோபம் வருமோ என்னமோ என்று பயம்; அதற்காக ஆலோசித்து, இன்று நம்முடைய பள்ளிக்கூடம் கிரிக்கெட் மாச் (Cricket Match) ஆடுவதைப் பார்ப்பதற்காக அரை நாள் விடுமுறை; ஆயினும் ஒரு மணிக்கு மேல் நீ இங்கே உட்கார்ந்திருந்து, 500 முறை "நான் இனிமேல் தமிழ் பாடம் சரியாகப் படித்துக்கொண்டு வருகிறேன்" என்று எழுதிவைத்து விட்டுத்தான் பந்தாட்டத்தைப் போய்ப்பார்க்க வேண்டும்" என்று கட்டளையிட்டுவிட்டு பந்தாட்டத்தில் பிரியமில்லாத ஒரு பிள்ளையை காவலாக வைத்து, "சபாபதி இதை ஐந்நூறு முறை எழுதி உன்னிடம் கொடுத்த பிறகு தான் இவனை இந்த அறையை விட்டு வெளியே போகவிடு" என்று கட்டளையிட்டு விட்டு, மற்ற பிள்ளைகளுடன் பந்தாட்டத்தைப்பார்க்கப் போனார். உடனே சபாபதி முதலியார் ஒரு காகிதத்தை யெடுத்து மேல் வரியாக "நான் இனிமேல் தமிழ் பாடம் சரியாகப் படித்துக்கொண்டு வருகிறேன்" என்று எழுதிவிட்டு அடியில்

டிட்டோ (ditto)
டிட்டோ (ditto)
டிட்டோ (ditto)

என்று 499 எழுதிவிட்டு, காவலாய் இருந்த பிள்ளையாண்டானிடம் கொடுக்க, அவன் "இதென்னப்பா சபாபதி இப்படி எழுதினயே!" என்று கேட்டான். அதற்கு நமது முதலியார் "எல்லாம் சரியாகத் தான் எழுதி யிருக்கிறேன், முன் உபாத்தியாயர் சொல்லவில்லையா? டிட்டோ என்று எழுதினல், மேலே எழுதி யிருக்கிறபடி என்று அர்த்தம் என்று!" ஆகவே தலைப்புவரி பிரகாரம் 499 மேற்படி எழுதியிருக்கிறதா இல்லையா பார்த்துக்கொள் என்று சொல்லிவிட்டு, அந்தப் பையனையும் அழைத்துக்கொண்டு அதி வேகமாய் பந்தாட்டம் நடக்கும் மைதானத்திற்கு உபாத்தியாயருக்கு முன்பாகப் போய்ச் சேர்ந்தார். கொஞ்சம் வயதான உபாத்தியாயர் மெல்ல நடந்து கொஞ்சம் பொறுத்து வந்தவர், சபாபதி முதலியார் தனக்கு முன்பாக அங்கிருப்பதை பார்த்து, "ஏனடா

"சபாபதி! இதற்குள்ளாக இம்பொசிஷன் (Imposition) எழுதி முடித்துவிட்டாயா?" என்று கேட்க சபாபதி முதலியார் "எழுதி விட்டேன் ஸ்வாமி, இதோ பார்த்துக்கொள்ளுங்கள்" என்று காவலாக இருந்த பையன் கையினின்றும் தான் எழுதிய காகிதத்தை வாங்கி உபாத்தியாயருக்குக் காண்பித்தார். அதைப் பிரித்துப்பார்த்து சபாபதி முதலியார் செய்த சூழ்ச்சியறிந்தவராய், சிரித்து "ஆடே சபாபதி! இந்த புத்தியை பாடம் படிப்பதில் உபயோகிக்கக் கூடாதா!" என்று கூறினார்.

## எட்டாம் கதை.

ஒரு நாள் ஒரு பாகவதர் ராமாயணப் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்—சீதாகல்யாணத்தைப்பற்றி. அச்சமயம் ராவணன் சீதையை மணக்கவேண்டி வந்ததாகவும், கன்யாசுல்கமாக வைத்திருந்த வில்லை வளைக்க முடியாமல் அவமானப்பட்டுப் போனதாயும் சொல்லும் பொழுது, ராவணனுடைய பராக்கிரமத்தைப்பற்றிக் கூறுங்கால், தேவதைகளும் சூரிய சந்திரர்களும்கூட அவனுக்குப் பயந்து நடந்ததாகக் கூறினார். அதை விவரித்துக் கூறும்பொழுது, ராவணனுடைய அரண்மனையில் சூரியன் புகுவதென்றால் ராவணனுடைய அனுமதியைப் பெற்றே அவன் நுழைவது வழக்கம் எனக் கூறினார். இதைக்கேட்டுக்கொண்டிருந்த நமது முதலியார், கதை முடிந்தவுடன் பாகவதரிடம் போய், "என்னையா பாகவதரே, ராவணனுடைய உத்திரவைப் பெற்றுதான் சூரியன் அவன் அரண்மனைக்குட் பிரவேசிப்பது என்று இதை ராவணனுக்கு ஒரு பெருமையாக எடுத்துக் கூறினீர்களே! எங்கள் வீட்டிலும் அப்படித்தான் செய்கிறான் சூரியன்" என்று கூற பாகவதர் ஆச்சரியப்பட்டு, "அது எப்படி முதலியார்அவாள்" என்று கேட்டார். அதன் பேரில் "நாளை காலை ஏழு மணிக்கு எங்கள் வீட்டிற்கு வாருங்கள் காண்பிக்கிறேன்" என்று சொல்லிவிட்டு தன் வீடுபோய்ச் சேர்ந்தார். மறுநாள் அதிகாலையில் பாகவதர் இதனுண்மையை அறியவேண்டுமென்று விரும்பினவராய், சபாபதி முதலியார் வீட்டிற்கு வந்து அவரை அவர் சொன்ன வார்த்தையை ரூபிக்கும்படிக் கேட்க,

உடனே நமது முதலியார், அதற்கு முன்பாகவே மூடி வைத்திருந்த ஜன்னல்களைக்காட்டி, "பாருங்கள், இப்பொழுது எங்கள் வீட்டில் சூரியன் நுழைகிறானா? இல்லையே !- இப்பொழுது நான் அனுமதி கொடுக்கிறேன். பிறகு தான் வரப்போகிறான் பாரும்!" என்று சொல்லி, ஜன்னல் கதவுகளை யெல்லாம் திறந்துவிட, உடனே முன்பு உள்ளே புகாத சூரியகிரணங்கள் உள்ளே நுழைந்து பிரகாசித்தன! பாகவதர் அவர்கள் நமது முதலியாருடைய யுக்தியை வியந்து சிரித்துவிட்டு வீடுபோய்ச் சேர்ந்தனர்.

## ஒன்பதாம் கதை.

நமது சபாபதி முதலியார் பள்ளிக்கூடத்தில் வாசித்துக் கொண்டிருந்த பொழுது அவரது வகுப்பு உபாத்தியாயர் பிஸிக்ஸ் (Physics) பாடம் சொல்லிக் கொண்டிருந்த பொழுது ஒருநாள் உலகத்தில் எப்பொருளும் முற்றிலும் அழிவதென்பது கிடையாது, ஒவ்வொரு பொருளும், எவற்றின் சேர்க்கையால் ஒரு பொருளாயிற்றோ அப்படிப்பட்ட பல வஸ்துக்களாகப் பிரிகிறது, என்று சொல்லி அதற்கு உதாரணமாக ஒரு மெழுகுவத்தியை கொளுத்தினால் அதில் ஒருபாகமும் முற்றிலும் அழிந்து போவதில்லை, பலவஸ்துக்கள் சேர்ந்து ஒன்றாகிய மெழுகுவர்த்தி எரியும் பொழுது அவ்வப் பொருள்களாகப் பிரிந்து போகிறது, ஆகவே மெழுகுவர்த்தியை கொளுத்தும் பொழுது ஒன்றும் நஷ்டமாகிறதில்லை ( Nothing is lost when a candle burns) என்று சொல்லி பாடபுஸ்தகத்தில் அதை ரூபிப்பதற்காக குறிக்கப் பட்டிருக்கும் உதாரணத்தை ரூபித்துக் காட்டினார். நமது சபாபதி முதலியார் அந்த உதாரணத்தின் அர்த்தத்தை அறியாது உபாத்தியாயர் முடிவில் சொன்ன, "ஒரு மெழுகு வர்த்தியைக் கொளுத்தினால் அதில் ஒன்றும் முற்றும் அழிந்து போவதில்லை" என்னும் வாக்கியத்தை மாத்திரம் கவனித்தார். இப்பாடம் ஒரு வெள்ளிக்கிழமை நடந்தது. மறுநாள் சனிக்கிழமை சாயங்காலம், நமது சபாபதி முதலியார் அவரது வாத்தியார் வீட்டிற்குப்போய் தன்னுடன் படித்த அவரது பிள்ளையை யழைத்தார். அப்பிள்ளையும்

நமது முதலியாரைப் போன்ற 'புத்திசாலி;' இருவருமாக நேற்று வாத்தியார் சொன்னதைப் பரிசோதித்துப் பார்க்கலாம் என்று ஆலோசனை செய்தவர்களாய், உபாத்தியாயர் வீட்டில் முன்னாள் வாங்கிவைத்த பெல்மான்ட் (Belmont) மெழுகு வத்திகள் அடங்கிய ஒரு பெட்டியை, அப்படியே வீட்டின் பின்பக்கமுள்ள தோட்டத்திற்கு எடுத்துக்கொண்டு போய், ஒரு தீயை மூட்டி, அதில் அத்தனை மெழுகு வத்திகளையும் போட்டு கொளுத்திக்கொண்டிருந்தனர். அத்தனை மெழுகு வர்த்திகளும் எரிந்துபோக கொஞ்சம் நாழியாயது. இதற்குள்ளாக ஏதோ வேலையாக வெளியே போயிருந்த உபாத்தியாயர் திரும்பிவந்து தன் பிள்ளையைத் தேடி வீட்டின் பின்புறமுள்ள தோட்டத்தில் போய்ப் பார்க்க, அங்கு அப் பிள்ளையும் நமது சபாபதி முதலியாருமாகச் செய்து கொண்டிருந்த வேலையைக் கண்டு "என்னடா! பசங்களா! மெழுகு வர்த்திகளையெல்லாம் இப்படிக் கொளுத்திப் பாழாக்குகிறீர்களே!" என்று கோபித்துக் கேட்க, நமது முதலியார் "ஒன்றுமில்லை வாத்தியார், நேற்று நீங்கள் பாடம் சொன்னீர்களே 'மெழுகு வர்த்தியெரியும் பொழுது ஒன்றும் அழிந்து போவதில்லை' யென்று அதைப் பரிசோதித்துப் பார்க்கிறோம்" என்று பதில் உரைத்தார். "நீங்கள் பாடம் படித்தது மிகவும் அழகுதான்!" என்று சொல்லி, எரியாமல் மிகுதியாயிருந்த இரண்டு மெழுகு வர்த்திகளை எடுத்துக்கொண்டு மேல் மாடி போய்ச் சேர்ந்தார். நமது முதலியார் உபாத்தியாயர் பிள்ளையை நோக்கி "ஏன் தம்பி, வாத்தியார் சொன்னபடிதானே நாம் செய்து பார்த்தோம், நம்மீது ஏன் கோபித்துக் கொள்கிறார்?" என்று மெல்ல வினவினர்.

---

## பத்தாம் கதை.

நமது முதலியார் வீட்டில் அவரது பாட்டன் முறையாக வேண்டிய ஒரு வயோதிகர் இருந்தார். அவருக்குக் காலில் ஏதோ ஒரு வித வியாதி கண்டு பாதம் வீங்கி யிருந்தது. இதைப் பார்க்க வந்த வீட்டு வயித்தியர், "இதற்கு வேறொன்றும் செய்ய வேண்டியதில்லை, பொடி தலையைச் சேர்த்துக் கட்டினால் குணமாகி விடும்,

என்று சொல்லிவிட்டுப்போனார். இதைக்கேட்டுக் கொண்டிருந்த நமது முதலியார், உடனே அந்த வயோதிகருக்கு எப்படியாவது சிகிச்சை செய்து சுவஸ்தப்படுத்த வேண்டுமென்று தீர்மானித்தவராய், தன்னுடன் பிறந்தநாள் முதல் பழகி வந்த வேலைக்காரனாகிய சபாபதியுடன் கலந்து ஆலோசித்தார். 'பொடி தலை' என்று வயித்தியர் சொன்னாரே அது எங்கே கிடைக்கும்? என்று அவனைக் கேட்க அவன் "போடி தலை தானே! இந்த மாசம் ரொம்ப கிடைக்கும் அப்பா; எங்கள் வீட்டுப் பையனுக்கு மொட்டை யடித்திருக்கிறார்கள், அவன் தலை போடி தலையாகத்தானிருக்கிறது. அவனைப் பிடித்துக்கொண்டு வந்து மெல்ல இவர் காலில் கட்டினால், சுலபமாய் நோய் போய்விடும்" என்று யுக்தி சொல்லிக்கொடுக்க, இருவருமாக அப்பையன் வீட்டிற்குப்போய் அப்பையனை நல்ல வார்த்தை சொல்லி தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்து நோயாளியருகில் அழைத்துக்கொண்டு போய், மழுங்க க்ஷவரம் பண்ணியிருந்த அவன் தலையைப் பிடித்து ஒரு குட்டையினால் நோயாளியின் காலில் கட்ட ஆரம்பித்தார்கள். தலை மொட்டையாயிருந்த அந்தப் பையன் அழத் தொடங்கினான். நோயாளியும் இதென்ன விசித்திரமாயிருக்கிறதென உரக்கக்கத்த ஆரம்பித்தார். வேலைக்கார சபாபதி "அடே பையா அழாதெ! அழாதே! கொஞ்சம் பொறுத்துக்கொள்; இதோ உடனே அவருக்கு ஸ்வஸ்தமானவுடனே அவிழ்த்துவிடுகிறோம்!' என்று கூச்சலிட்டான். இத்தனை ஆரவாரத்தில் வயித்தியர் பொடி தலையைக் கடையில் வாங்கிக்கொண்டு நோயாளிக்குக் கட்ட வந்து சேர்ந்தார். இங்கு மற்ற நால்வரும் இருக்கும் அலங்கோலத்தைக்கண்டு, என்னடா அப்பா இது? என்று சபாபதி முதலியாரை விசாரிக்க "நீங்கள் சொன்னீங்களே போடி தலையைக் கட்டினால் இந்த கால் விக்கம் வாங்குமென்று, அதற்காக இந்த பையன் போடி தலையைக் கட்டுகிறோம்" என்று பதில் சொன்னார். உடனே வயித்தியர் அப்பையனை அவிழ்த்து விட்டு, "நீ வீடுபோய்ச் சேரப்பா" என்று சொல்லி அனுப்பி விட்டு "என்னடா, அப்பா சபாபதி, நான் பொடிதலையை யென்று சொன்னேனா போடி தலை என்று சொன்னேனா! அம்பட்டும் பொடி தலையைக் கட்டவேண்டும் மென்று சொல்வதை விட்டு, பொடிதலையை நசிக்கிக்கட்டவேண்டும்

என்று சொல்லாமற் போனது என் அதிர்ஷ்டம்! அந்த பையனுடைய அதிர்ஷ்டம்! அப்படிக்கு சொல்லியிருப்பேனுயின் அந்தப் பையனுடைய போடிதலையை உரலிலிட்டு நசிக்கிக் கட்டியிருப்பீர்கள் போலும்!'' என்று கூறிவிட்டுத் தான் கொண்டு வந்த பொடிதலை இலைகளை நோயாளியின் காலில் கட்டிவிட்டுப் போனுர்.

## பதினென்றும் கதை

ஒருமுறை சபாபதி முதலியார் தகப்பனுர் திண்டுக்கல் என்னும் ஊரில் உத்தியோகமாயிருந்தார். அச்சமயம் சபாபதி முதலியார் பள்ளிக்கூடத்தில் கோடைகால விடுமுறைகாலமாயிருந்தபடியால் சபாபதி முதலியாரைத் தன் இடம் திண்டுக்கல்லுக்கு வரவழைத்துக்கொண்டார். அச்சமயம் ஒரு நாள் சபாபதி முதலியார் தகப்பனுரிடம் ஒருஸ்வாமியார் தனக்கு ரசவாதம் செய்யத் தெரியும் என்று வீம்பு பேசினுர். இதிலெல்லாம் நம்பிக்கையில்லாத அவர் "எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது, என் பிள்ளையாகிய சபாபதிக்கு அந்த வித்தையைக் கற்றுக்கொடுங்கள்'' என்று சொல்லிவிட்டு ஏதோ வேலையாக வெளியிற் சென்றுர். ரசவாத சாமியார் இதுதான் தக்க சமயம், தகப்பனுரை ஏமாற்றுவதைவிட, பிள்ளையாண்டானை ஏமாற்றுவது சுலபம் என்று எண்ணினவராய், நமது சபாபதி முதலியாரை அழைத்து "தம்பி, உனக்கு ரசவாத வித்தை கற்றுக்கொடுக்கிறேன். கற்றுக் கொள்ளுகிருயா?'' என்றுர் அதன் பேரில் சபாபதி முதலியார், ரசவாதம் என்றுல் என்னவென்று கேட்க, "அது ஒரு சித்தர் வித்தை, சில ரகசியமான மூலிகைகளை யெல்லாம் சேர்த்து தீ யுண்டாக்கி, அத் தீயில் எந்த வஸ்துவைப் புடம் போட்டாலும் அது பொன்னுகி விடும்'' என்றுர். அதற்கு சபாபதி முதலியார் "மிகவும் சந்தோஷம் ஸ்வாமி, அப்படிப்பட்ட வித்தையை எனக்கு காண்பியுங்கள்'' என்று சம்மதித்தார். "காண்பித்தால், எனக்கென்ன தருகிருய்?'' என்று ஸ்வாமியார் கேட்க, உங்கள் மனம் திர்ப்தியாகும்படி ஏதாவது தருகிறேன் என்று பதில் சொன்னுர். "ஆனல் தோட்டத்திற்குப்போய் ஒரு சிறிய சருங்கல்லைக் கொண்டுவா அதைப் பொன்னுக்குகிறேன்

பார்'' என்று ஸ்வாமியார் சொல்ல, "இதெல்லாம் வேண்டாம், நான் ஒரு கல்லைக் காட்டுகிறேன், அதைப் பொன்னாக்கினால் எல்லாவற்றிற்கும் நல்லது'' என்று பதில் கூறிவிட்டு, ஸ்வாமியாரை அக்கல்லைக் காட்டுவதற்காக வீட்டிலிருந்து அரைமைல்தூரம் அழைத்துக்கொண்டுபோய் அங்கிருந்த திண்டுக்கல் மலையைக் காண்பித்து "ஸ்வாமி, எதை வேண்டுமென்றாலும் பொன்னாக்கலாம் என்கிறீர்களே; இது ஒரு கல். இந்தக்கல்லைப் பொன்னாக்கி விடுங்கள் உங்கள் மூலிகைகளினால் அஸ்திவாரத்தில் தீ வளர்த்தி புடம் போட்டு'' என்று சொன்னார். இதைக் கேட்டதும் ஸ்வாமியார் அடங்காச் சிரிப்பு கொண்டவராய், "ஏது தம்பி, எனக்கு மேலே இருக்கிறாயே'' என்றார். அப்பொழுது "அப்படி பல்ல ஸ்வாமி, சிறுகற்களைப் பொன்னாக்குவதில் என்ன பிரயோஜனம்? இந்த திண்டுக்கல்லைப் பொன்னாக்கினால், அதில் பாதி உங்களுக்கு இந்த வித்தை எனக்குக் கற்பிப்பதற்காகக் கொடுத்து விட்டு, மற்ற பாதியை நான் எடுத்துக் கொள்ளலாம் என்று பார்த்தேன்!'' என்று சபாபதி முதலியார் பதில் உரைக்க "ரொம்ப சரி! இதோ வந்து அப்படியே செய்கிறேன்'' என்று சொல்லி விட்டுப் போன ஸ்வாமியாரை இன்று வரையில் சபாபதி முதலியார் தேடிக்கொண்டிருக்கிறார் என்று கேள்விப்படுகிறேன்.

## பன்னிரண்டாம் கதை.

சபாபதி முதலியார் சிறுபிள்ளையாயிருந்த பொழுது ஒரு நாள் அவரது அம்மான் தனது கிராமத்தில் ஓரிடத்தில் நடந்த அரிச்சந்திரன் தெருக்கூத்தைப்பார்க்க அழைத்துக்கொண்டு போயிருந்தார். மறுநாள் காலை சபாபதி முதலியாரை அவர் தந்தையிடம் கொண்டு வந்து ஒப்புவிக்க சபாபதி முதலியார் தந்தை "என்ன அப்பா, என்ன பார்த்தாய்?'' என்று வினவ, சபாபதி முதலியார் "நான் ஹரிச்சந்திர விலாசம் பார்த்தேன்'' என்று விடை பகர்ந்தனர். அதன் பேரில் அவருடைய தந்தை "அதனால் என்ன தெரிந்துகொண்டாய்?'' என்று கேட்க, "நாம் நிஜம் பேசுவதில் பிரயோஜனமேயில்லை. அதனால் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகிறோம் என்பதைக் கற்றுக்கொண்டேன்''

என்று சபாபதி முதலியார் பதில் சொன்னர். இதென்னடா விபரீத மாயிருக்கிறதே யென்று அவர் தந்தை "ஹரிச்சந்திர விலாசத்திலி ருந்து இதை எப்படி கற்றனை?" என்று கேட்க, சபாபதி முதலியார் "பாருங்கள் நாயனு, ஹரிச்சந்திரன் நிஜம் பேசுகிறபடியினுல் தானே தன் ராஜ்யமும் போய், பிள்ளையையும் பெண்ஜாதியையும் விற்க நேரிட்டு, தானும் ஒரு பறையனுக்கு அடிமையாகி சுடுகாட்டைக் காக்கும்படி நேரிட்டது? ஒரு பொய் பேசி யிருந்தால் இவ்வளவு கஷ்டமெல்லாம் நேரிடாதே?" என்று சொன்னர். அதன் பேரில் "ஆமாம் சபாபதி, சத்தியத்தைக் காக்க இவ்வளவு கஷ்டமெல்லாம் பட்டபோதிலும் கடைசியில் ஹரிச்சந்திரன் தன் மனைவி மக்களை யும் ராஜ்யத்தையும் பெற்று பெருங் கீர்த்தியடைய வில்லையா?" என்று அவர் தந்தை கேட்க, அதை யெல்லாம் நான் பார்க்க வில்லையே யென்றுர் சபாபதி முதலியார். "ஏன் அப்படி?" என்று அவர் தந்தை கேட்க, "ஹரிச்சந்திரன் சுடுகாட்டைக் காக்கும் பாகம் வரையில் விழித்துக்கொண்டிருந்தேன் அப்புறம் தூங்கிவிட்டேன்" என்று தெரிவித்தார்.

## பதின்மூன்ரும் கதை

சபாபதி முதலியார் பள்ளிக் கூடத்தை விட்டு விலகிய வருஷம் அவர் வகுப்பிற்கு ஆல்ஜிபரா பாடம் சொல்லிக்கொடுத்த உபாத்தியாயரும் வயது மேலிட்ட படியால் விலகும்படி நேரிட்டது. இந்த உபாத்தியாயர் பெரிய சுடு மூஞ்சி, எந்நேரமும் பிள்ளைகள் மீது சிடுசிடு என்று எரிந்து விழுந்துகொண்டிருந்தவர், அவருக்கு வகுப்பு பிள்ளைகளெல்லாம் அனுமார் என்கிற பட்டப் பெயர் கொடுத்திருந்தனர். பள்ளிக்கூடத்தை விட்டு அவர் விலகும் தினம் அவருக்கு ஏதாவது தக்கபடி மரியாதை செய்யவேண்டு மென்று அப்பள்ளிக்கூடத்து ஹெட்மாஸ்டர் எல்லோரையும் நிர்ப் பந்தித்தனர். இதற்கு முக்கிய காரணம் அந்த உபாத்தியாயர் ஹெட்மாஸ்டருக்கு நெருங்கின பந்து என்பதேயாம். ஹெட்மாஸ் டர் நிர்ப்பந்திக்கும் போது மற்ற உபாத்தியாயர்களும் பிள்ளைகளும் என்னசெய்வார்கள் பாபம்! மூக்கால் அழுதுகொண்டே எல்லோரும்

இரண்டு ஒன்றாக கட்டணம் செலுத்தினார்கள். இப்படி வசூலித்த பணத்தைக்கொண்டு ஹெட்மாஸ்டர் அந்த உபாத்தியாயருடைய படம் ஒன்றை எழுதுவித்து அதை அந்த உபாத்தியாயர் பள்ளிக் கூடத்தை விட்டு விலகும் தினம் சாயங்காலம் திறந்து வைக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்தனர். முந்தியதினமே அப்படம் பள்ளிக்கூடத்திற்கு கொண்டு வரப்பட்டு சுவற்றில் மாட்டப்பட்டது. அதைத் திறக்கும் வரையில் யாரும் பார்க்கக் கூடாதென்று மிகவும் பந்தோபஸ்தாய் ஒரு வஸ்திரத்தினால் மூடி வைத்துவிட்டுப் போனார் ஹெட்மாஸ்டர். அன்று சாயங்காலம் பள்ளிக்கூடம் கலைந்து எல்லோரும் வீட்டுக்குப் போனபிறகு, நமது சபாபதி முதலியார் இப்படிப்பட்ட உபாத்தியாருக்குத் தக்க பிராயச்சித்தம் செய்து வைக்கவேண்டுமென்று தீர்மானித்தவராய், பள்ளிக்கூடத்திற்கு கொஞ்சம் இருட்டியவுடன் போய், காவலாயிருந்த பியூனுக்கு ஒரு ரூபாய் லஞ்சம் கொடுத்து, படம் மாட்டியிருந்த அறைக்குட் பிரவேசித்து மூடி யிருந்த துணித் திரையை மெல்ல திறந்து, அப்படத்தின் பேரில், தான் விலைக்கு வாங்கின ஒரு அனுமார் படத்தை பிசினைக்கொண்டு சரியாக ஒட்டிவிட்டு, மறுபடியும் முன்பிருந்தது போலவே திரைத் துணியால் மூடி விட்டு வந்து விட்டார். மறுநாள் சாயங்காலம் ஐந்து மணிக்கெல்லாம், அந்த உபாத்தியாயருடைய படத்தை திறக்கும் காட்சியைக் காண்பதற்காக மற்ற உபாத்தியாயர்களும் அப்பள்ளிக்கூடத்து டிரஸ்டிகளும் பிள்ளைகளும் பெருங் கும்பலாக அந்த அறையில் கூடினர். பிறகு ஹெட்மாஸ்டர் அப்பள்ளிக்கூடத்து டிரஸ்டி ஒருவரை அக்கிராசனாதிபதியாக இருக்கும்படி கோரி, அதன் பேரில் தன் பந்துவாகிய உபாத்தியாயருடைய (இல்லாத) குணங்களை யெல்லாம் புகழ்ந்து பேசி, இவரைப் போன்ற சாந்த மூர்த்தி உலகில் வேறெங்கும் கிடைப்பது அரிது, எந்நேரமும் புன்னகையுடனே இருப்பார் ஒருவரையும் கடிந்து பேசமாட்டார். முகத்தைச் சுளித்துப் பார்க்க மாட்டார், இவரைப்போல் மற்ற உபாத்தியாயர்களும் நடந்து கொண்டால் பள்ளிக்கூடத்திற்கு மிகவும் நல்லது'' என்று கூறி முடித்து, அக்கிராசனாதிபதியை அந்த உபாத்தியாயர் படத்தைத் திறந்து வைக்கும்படி கேட்டுக்கொண்டார். அதன் பேரில் அக்கிராசனாதிபதியும்

படத்திரையானது விலகும்படி சூட்சுமமாக வைத்திருந்த கயிற்றை அறுக்க, படத்தை மூடியிருந்த திரைத் துணி கீழே விழுந்தது, தட்சணம் அங்கிருந்த எல்லோர்கண்களுக்கும் அந்த உபாத்தியாயர் படத்தையன்றி கோபவேசம் கொண்ட அனுமார் படம் பட்டது! உடனே அங்கிருந்தவர்களெல்லாம் ஒரு க்ஷணம் ஸ்தம்பித்துப் போயினர். பிறகு பிள்ளைகளெல்லாம் நகைக்க ஆரம்பிக்க, உபாத்தியாயர்களும் அங்கிருந்த டிரஸ்டீயாகிய அக்கிராசனாதிபதியுள்பட எல்லோரும் கொல்லென்று நகைத்து விட்டனர்! நகையாமல் இருந்தவர்கள் ஹெட்மாஸ்டரும் அவரது பந்துவாகிய அந்த உபாத்தியாயரும்; தான் செய்த சூழ்ச்சியின் வேடிக்கையைப் பார்க்கவந்த சபாபதி முதலியாரும் அந்நகைப்பில் சேர்ந்தனர் என்று நான் சொல்ல வேண்டியதில்லை. அந்த உபாத்தியாயர் இது தன் தாயாதியாகிய ஹெட்மாஸ்டர் செய்த சூதென்று கோபித்துக்கொண்டு சரேலென்று வீடு போய்ச் சேர்ந்தார்.

## பதினன்காம் கதை.

சபாபதி முதலியார் தினம் மத்தியானத்தில் போஜனம் கொண்டவுடன் ஏதாவது பழவர்க்கங்களைச் சாப்பிடுகிற வழக்கம். அதன்படி ஒரு நாள் மத்யானம் ஒரு தட்டில் கிச்சிலிப்பழமும், ஜம்பு நாவற்பழமும் கொண்டுவந்து அவர் முன் வைத்தார்கள். அச்சமயம் அவரது நண்பர்களிலொருவராகிய தினகரசாமி நாயுடு வந்து சேர்ந்தார். இந்த நாயுடுகாரு நாட்டுப்புறவாசி, இவர் ஜம்பு நாவற் பழம் சாப்பிட்டிருக்கிறாரா இல்லையா என்று பரீட்சிப்பதற்காக, நமது முதலியார் ஒரு கிச்சிலிப்பழத்தை எடுத்து தோலை உரித்து எறிந்துவிட்டு உள்ளே இருக்கும் சுளைகளை வாயிற் போட்டுக் கொண்டு மென்றார். "ஏன் நாயுடுகாரு, நீங்களும் சாப்பிடுங்களேன்" என்று சொல்லவே, நாயுடுகாரும் ஒரு கிச்சிலிப்பழத்தை எடுத்து தோலை உரித்து எறிந்துவிட்டு உள்ளிருக்கும் சுளைகளை வாயிற் போட்டுக்கொண்டு மென்று தின்றார். பிறகு நமது முதலியார் அவர்கள் ஒரு ஜம்பு நாவற்பழத்தை எடுத்து அதன் தோலையும்

உரித்து கீழே எறிந்து விட்டு கொட்டையை வாயிற் போட்டுக் கொண்டு மெல்லுவது போல் பாசாங்கு செய்தார். அது வரையில் ஜம்பு நாவற்பழத்தைத் தின்றிராத நாயுடுகாரும் அப்பழத்தையும் அப்படித்தான் சாப்பிடவேண்டியது போலும் என்று நினைத்தவராகி ஒரு ஜம்பு நாவற்பழத்தை எடுத்து அதன் தோலை உரித்து கீழே எறிந்துவிட்டு, உள்ளிருந்த கொட்டையை வாயிற்போட்டுக்கொண்டு கட கடவென்று கடித்துத் தின்ன ஆரம்பித்தார். இதை வாசிக்கும் எனது நண்பர்கள் ஜம்பு நாவற் பழக் கொட்டையை எப்போதாவது ருசி பார்த்திருக்கிறார்களோ என்னவோ? அப்படி இதுவரையில் பாராதிருந்தால் இனி பார்க்காமலிருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். அது மிகவும் கசப்பானவஸ்து; அதை நாயுடுகாரு கடித்துத்தின்ன ஆரம்பித்தவுடன் அதன் கசப்புப் பொறுக்கமுடியாமல் முகத்தை மிகவும் சுளிக்க ஆரம்பித்தார். உடனே நமது முதலியார் அவர்கள் அவரைப் பரீட்சித்தது போதும் என்று எண்ணி நகைத்துக் கொண்டே "என்ன நாயுடுகாரு, ஜம்புநாவல் பழத்தின் தோலைத் தின்பார்களா, கொட்டையைத் தின்பார்களா? உமிழ்ந்து விடுமையா கொட்டையை!" என்று சொல்ல, நாயுடுகாரு வாயிலிருந்ததை உமிழ்ந்துவிட்டு, நீங்கள் மாத்திரம் எப்படி கொட்டையைச் சாப்பிட்டீர்களென்று கேட்க "உம்மைப் பரீட்சித்தேனே யொழிய நான் அதன் கொட்டையைத்தின்னவில்லை" என்று சொல்லி, வாயில் ஒரு பக்கம் அடக்கிவைத்துக் கொண்டிருந்த கொட்டையை வெளியே உமிழ்ந்தார்.

## பதினைந்தாம் கதை.

நமது முதலியாருக்கு தூரபந்துவாகிய ஒரு பிள்ளையாண்டான் பெங்களூரிலிருந்து விடுமுறை காலத்தில் சென்னைக்கு வந்தார். அவர் பெயர் மிஸ்டர் ராஜகோபால்; சைகில் விடுவதில் அவர் தேர்ச்சி பெற்றவர்; அநேக சைகில் பந்தயங்களில் பரிசுபெற்றவர். சபாபதி முதலியாரும் இதற்கு முன்பாக, தன் தகப்பனாரைக்கேட்டு ஒரு பழைய சைகில் ஒன்றை வாங்கி அதில் பழகி வந்தார். ராஜகோபால் சபாபதி முதலியாரிடம் ஒருநாள் வந்து, சைகில் பந்தயங்களில்

பெங்களூரில் தான்பெற்ற பொற்பதக்கங்கள் முதலியவற்றை யெல்லாம் காட்டி, 'சென்னையில் யாராவது சைகில் விடுவதில் கெட்டிக்காரர்களிருந்தால் சொல், அவர்களுடன் பந்தயம் போடலாமென்று வந்திருக்கிறேன்' என்று சொல்ல, நமது முதலியார், "மற்றவர்களிருக்கட்டும் என்னை முன்பு ஜெயி" என்று சொல்ல, இருவரும் கிண்டிப் பந்தய கிரௌண்டில் 3 முறை சுற்றிவர வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார்கள். அதன்பேரில் இருவரும் பந்தயத்திற்காகப் பழக ஆரம்பித்தார்கள்.

நமது முதலியார் அவருடைய தகப்பனுரைக்கேட்டு ஒரு புது மாதிரி சைகில் வாங்கிக்கொண்டார். ராஜகோபால் தினம் காலை மாலைகளில் பத்து இருபது மைலுக்குக் குறையாமல் சைகில் விட்டுப் பழகி வந்தார். மூன்று தினங்கள் ஆனவுடன் ராஜகோபால் நமது முதலியாரிடம் வந்து, "நீங்கள் கற்றுப்பழகி வருகிறதில்லையா? உங்களை நான் எங்கும் சந்திக்கவில்லையே," என்று கேட்க, "அதெல்லாம் நான் சரியாகப் பழகிவருகிறேன்," என்று பதில் சொன்னார். அதன்பேரில் ராஜகோபால், இவர் எப்பொழுது பழகுகிறார், எப்படிப் பழகுகிறார், எங்கு பழகுகிறார், என்று அக்கம் பக்கத்தில் விசாரித்தும் ஒன்றும் புலன் அகப்படவில்லை அவருக்கு. அதன்பேரில் ஒரு நாள் அதிகாலையில் முதலியார் வீட்டிற்கு வந்து, அவரது புதிய சைகில் வைத்திருக்குமிடம் போய், அதை வாங்கிய பிறகு எத்தனை மைல் அதில் சவாரி செய்திருக்கிறார் என்று அதில் வைத்திருக்கும் யந்திரத்தில் பார்க்க, அதில் அந்த சைகில் இருநூற்றுச் சில்லரை மைல் சவாரி செய்யப்பட்டதாகத் தெரிந்தது. ராஜகோபால் ஆச்சரியப்பட்டார். என்னடா நாம் இந்த நாலைந்து நாட்களாக காலையில் பழகி வருகிறோம். நமக்கு 120 மைல்களுக்குமேலாக வில்லை, இவர் சைகிலில் 200 மைல்களுக்கு மேல் சவாரிசெய்திருக்கிறார். பாதி ராத்திரியில் யாருமறியாதபடி சவாரி செய்கிறார் போலிருக்கிறது. ஒரு நாளைக்கு 50 மைலுக்கு மேல் சவாரி செய்பவருடன் நாம் போட்டி போட்டு என்ன பயன்! இவர் நம்மை எப்படியும் தோற்கடித்து விடுவாரென்று பயந்து உடனே அன்றைத்தினம் மத்தியானம் எக்ஸ்பிரஸில் (Express) புறப்பட்டு

பெங்களூர் போய்ச் சேர்ந்தார். சேர்ந்ததும், சபாபதி முதலியார் மைத்துனனாகிய கிருஷ்ணசாமிக்கு ஒரு கடிதம் எழுதி அதில் 200 மைலுக்குமேல் நான்கு தினங்களில் சவாரி செய்ததற்காக சபாபதி முதலியாரைப் புகழ்ந்து, அவரைத் தான் தோற்கடிக்க முடியாதென்று ஒப்புக்கொண்டு, பந்தயம் கட்டின ரூபாயை மணியார்டர் செய்து அதை அவரிடம் கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொண்டார்.

இக் கடிதத்தைக் கண்ட கிருஷ்ணசாமி "நம்முடைய மைத்துனர் சைகில் விடும் சாமர்த்தியம் நமக்குத் தெரியுமே; இவர் எப்படி நான்கு நாட்களில் 200 மைல் சவாரி செய்தாரென்று அறிய வேண்டும்" என்று தீர்மானித்து, சபாபதி முதலியாரிடம் போய் பந்தய ரூபாயைக் கொடுத்து தனக்கு வந்த காகிதத்தையும் காட்டி, "நான்கு நாட்களுக்குள் எப்படி சென்னையில் இருநூறு மைல் சைகில் விட்டீர்கள்?" என்று கேட்க, நமது முதலியாரவர்கள், "நிரம்ப சுலபம் அப்பேன், இதோ காட்டுகிறேன் பார்," என்று சொல்லி வேலைக்கார சபாபதியை அழைத்து 'விடடா சைகில்' என்று அவனுக்குக் கட்டளை யிட்டார். அவன் உடனே சைகில் ஸ்டாண்டில் (Stand) இருந்த சைகிலை எடுத்து, உத்திரத்திலிருந்த ஒரு ஆணியிலிருந்து கயிற்றைக்கட்டி அதில் சைகிலைத் தொங்க விட்டுத் தான் நேரே நின்றுகொண்டு, சைகில் சக்கரத்தை வேகமாய்ச் சுற்றத் தொடங்கினான். சிறிது பொழுதுக்கெல்லாம் மைலைக் குறிக்கும் யந்திரம் அதி வேகமாகத் திரும்ப ஆரம்பித்தது. இதைக் கண்டதும் கிருஷ்ணசாமி, "இப்படியா சைகிலில் 200 மைல் போனதாகக் காண்பித்தீர்!" என்று சொல்லி நகைத்து, "ஆனால் பந்தயம் ஜெயித்த ரூபாயில் பாதியை வேலைக்கார சபாபதிக்குக் கொடுத்து விடுங்கள்" என்றார். "சீச்சீ! மொத்தத்தையும் அவனுக்கே கொடுத்து விடவேண்டும். அவனுக்குச் சீக்கிரம் கலியாணம் ஆகப் போகிறது," என்று சொல்லி, அந்தப் பந்தய ரூபாய் அவ்வளவையும் வேலைக்கார சபாபதிக்குக் கொடுத்து விட்டார்.

## பதினாறும் கதை.

ஒரு முறை சபாபதி முதலியார் வீட்டில் ஒரு கலியாண விஷயமாக ஒரு கச்சேரி வைக்கவேண்டி வந்தது. அதற்காக அக்காலம் சென்னையில் 'பிரபல பாகவதர்' என்று பெயர் பெற்ற ஒரு பாகவதரை, பிரஹ்லாத சரித்திரக் கதையைச் சொல்லும்படி ஏற்படுத்தினார். சபாபதி முதலியாருடைய நண்பர்களெல்லாம் "இந்த பாகவதர், சொன்ன மணிப்பிரகாரம் வரவும் மாட்டார், இத்தனை மணிக்குள் முடிக்க வேண்டுமென்றாலும் அதற்கும் உடன்படார், நாழிகை கழித்தும் வருவார், கதையைப் பிறகு அதிக நாழிகை இழுக்கவும் இழுப்பாரே, இவரை ஏன் ஏற்படுத்தினீர்கள்?" என்று கேட்டதற்கு "சரி பார்க்கலாம்," என்று அவர்களுக்குப் பதில் சொல்லி விட்டு, கதை செய்யவேண்டிய தினத்திற்கு முன்தினமே, பாகவதர் அவர்களுக்கு, "நாளை சரியாக ஐந்து மணிக்குக் கதையை ஆரம்பஞ் செய்யவேண்டும். சரியாக எட்டு மணிக்கெல்லாம் கதையை முற்றிலும் முடித்துவிட வேண்டும்," என்று சொல்லி யனுப்பிவைத்தார்.

அப்படிச் சொல்லி யனுப்பியும் பாகவதர் காலதாமதமாய், முக்கால்மணிநேரம் பொறுத்து சபாபதி முதலியார் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். அப்பொழுது சபாபதி முதலியார் ஒன்றும் பேசாமல், பாகவதர் எதிரில் ஒரு அலாரம் (alarum) அடிக்கும் கடியாரத்துக்குச் சாவிகொடுத்து வைத்து, "சரியாக எட்டுமணிக்கெல்லாம் கதை முடிவாகவேண்டும்," என்று சொல்லிவிட்டு, தன் வீட்டிற்கு வந்துள்ள விருந்தினர்களை உபசரித்துக்கொண்டிருந்தார். நாழிகை பொறுத்து வந்த பாகவதர், பிறகு காலில் சலங்கை முதலியனவெல்லாங் கட்டிக்கொண்டு, கையில் சப்ளாக்கட்டை எடுத்துக் கொண்டு, பூர்வ பீடிகை போட்டுப் பாடல்களையெல்லாம் பாடிவிட்டு, "ஆதௌ, கீர்த்தனாரம்பத்திலே," என்று ஆரம்பித்து, 'தெய்வபக்திதான் கலியுகத்தில் மோட்ச சாதனம்', என்பதைப் பற்றி ஒருமணி சாவகாசம் பிரசங்கம் செய்துவிட்டு, இரணியகசுபுவிற்கு பிரஹ்லாதன் என்னும் குழந்தை பிறந்ததைச் சொல்ல $7\frac{1}{2}$ மணியாகிவிட்டது. அப்பொழுதும் சபாபதி முதலியார் ஒன்றும்

கூறினவரன்று. பிறகு பிரஹ்லாதன் பிறந்ததற்காக, அவன் தந்தையாகிய அசுரராஜன் கொண்டாடிய வைபவங்களை யெல்லாம் வர்ணிக்கச் சரியாக எட்டு மணி யாயிற்று.

சரியாக எட்டு மணி யானவுடன், பாகவதருக்கு எதிரில் வைத்திருந்த அலாரம் கடியாரம், கடகடவென்று உரத்த சப்தத்துடன் இரண்டு நிமிஷம் அடித்தது! பாகவதர் கதையையும் பாட்டையும் நிறுத்தவேண்டிய தாயிற்று. வந்தவர்கள் முதலில் ஆச்சரியப்பட்டு, பிறகு நமது முதலியார்செய்த யுக்தியைக் கண்டவர்களாய், நகைக்க ஆரம்பித்தனர். பாகவதர் கொஞ்சம் லஜ்ஜைப் பட்டாரா யினும் தேற தலைப் பெற்றுக் கதையை அதன்மேல் சொல்ல ஆரம்பித்தார். உடனே முதலியார், "பாகவதரவாள்! நான் முன்பே சொன்னேனே, எட்டுமணிக்கெல்லாம் கதை முடியவேண்டுமென்று, ஆதலின் இத்துடன் இன்றைக்கு நிறுத்துங்கள்" என்று சொல்ல, பாகவதர், "கதை யெல்லாம் இனிமேல் தானே யிருக்கிறது. இப்பொழுதுதானே பிரஹ்லாதன் பிறந்தான். இனிப் பள்ளிக்கூடத்திற்குப் போகவேண்டாமா, பிறகு..." என்று ஆரம்பித்தார். சபாபதி முதலியார் உடனே அவரைத் தடுத்து, "அந்த யோசனை யெல்லாம் முன்பே யிருந்திருக்கவேண்டும். ஆயினும் இப்பொழுது தான் பிறந்த பிரஹ்லாதன் ஐந்து வருஷத்திற்குப் பிறகுதானே பள்ளிக்கூடத்திற்குப் போகவேண்டும். ஆகவே இன்னும் ஐந்து வருடங்கள் பொறுத்துவாரும். அப்போது மிகுதிக் கதையைத் தாங்கள் நடத்தலாம்," என்று சொல்லி வந்திருந்த விருந்தினர்களை யெல்லாம் உள்ளே சாப்பாட்டிற்கு அழைத்துக்கொண்டு போய் விட்டார். பாகவதரும் பக்கவாத்தியக் காரர்களும் மட்டும் மிகுதியா யிருந்தார்கள். பாகவதர் கோபம் கொண்டபோதிலும், என்ன செய்வது என்று தோன்றாதவராய், வருத்தத்துடன் வீடுபோய்ச் சேர்ந்தார். மறுநாள், நம்முடைய முதலியார் சாவகாசமாயிருக்கும் பொழுது, அவரைப் பார்த்து, தான் செய்தது தப்பிதம் என்று ஒப்புக்கொண்டு, எப்படியாவது தனக்கு அவமானமில்லாதபடி செய்ய வேண்ட, முதலியாரவர்கள் வேறொரு தினம் கதையை வைத்து, தன் பழய விருந்தினர்களை யெல்லாம் வர வழைத்தார். அன்றைத் தினம் ஐந்து மணிக்குக் கதாரம்பமென்று குறித்திருந்த

போதிலும் நாலுமணிக்கெல்லாம் பாகவதர் சபாபதி முதலியார் வீட்டிற்கு வந்து சேர்ந்து, கதையை மணிப்பிரகாரம் முடித்து தனக்குச் சேரவேண்டிய சன்மானத்தைப் பெற்றுக்கொண்டு போனார். அன்று முதல் அந்தப் பாகவதர் எங்கே கதை செய்யச் சொன்னாலும், குறித்த மணிக்கு முன்னதாகவே போய், குறித்த மணிக்குள் கதையை முற்றிலும் பூர்ணம் செய்யும் விதத்தை விட்டிலர்.

## பதினேழாம் கதை.

சபாபதி முதலியாருக்கு தேசிகாச்சாரியார் என்று ஒரு நண்பர் இருந்தார். ஒரு நாள் சபாபதி முதலியார் அந்த நண்பரைக் கிளப்பில் சந்தித்த பொழுது அவர் மிகவும் வாட்ட முடைய முகத்தினராய் இருந்ததைக் கவனித்து, "ஏன் ஒருவாறு இருக்கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு தேசிகாச்சாரியார் தக்க பதில் சொல்லாமலிருப்பதைக் கண்டு எப்படியாவது தன்னிடம் சொல்லவேண்டுமென்று நமது முதலியார் நிர்ப்பந்தித்ததின் பேரில் கடைசியாக அவர், "வேறொன்று மில்லை, நான் இன்னும் இரண்டு வருடங்களுக்கு மேல் உயிருடன் இருக்கமாட்டேன்" என்று பதில் உரைத்தார். "அடடா! இதென்ன விபரீதம், யாராவது ஜோஸ்யர்களைக் கேட்டீர்களா என்ன?" என்று கேட்க, சென்னையில் அச்சமயம் எல்லோருக்கும் எதிர்கால பலன் எழுதிக்கொடுத்து, துட்டு சம்பாதித்துக் கொண்டிருந்த ஒரு ஜோஸ்யரிடம் தன் ஜாதகத்தைக் காட்டிக் கேட்டதாகவும், அதற்கு ஜோஸ்யர் தனக்கு இன்னும் ஆயுள் இரண்டு வருஷம் தான் என்று கூறியதாகவும், சொன்னார்.

அந்த ஜோஸ்யருக்குப் பெயர் நாயுடு ஜோஸ்யர் என்று நாம் வைத்துக்கொள்வோம். அந்த நாயுடு ஜோஸ்யரைப் பற்றி சபாபதி முதலியார் முன்பே கேள்விப்பட்டிருந்தார். நம்முடைய முதலியாருக்கு அந்த ஜோஸ்யரிடம் கொஞ்சமும் நம்பிக்கை இல்லை. "இந்த ஜோஸ்யத்திலெல்லாம் ஒன்று மில்லை. இதை எல்லாம் நம்பாதீர்கள்," என்று தேசிகாச்சாரியாரிடம் எவ்வளவு சொல்லிப்

பார்த்தும் தேசிகாச்சாரியார் துயரம் தணிந்திலர். அதன் பேரில், அவரிடம் "நான் ஜோஸ்யம் சொல்லுகிறேன் பாருங்கள். நீங்கள் இரண்டு வருஷங்களுக்குள் இறக்கப் போகிறதில்லை" என்று அவரிடம் சொல்லிவிட்டு வீட்டிற்குப் போய் எப்படியாவது தன் நண்பருடைய மனக்கவலையைப்போக்கவேண்டுமென்று தீர்க்காலோசனை செய்து, மறுநாள் தன் வீட்டின் பக்கத்துத் தெருவில் குடியிருந்த அந்த நாயுடு ஜோஸ்யர் வீட்டண்டை போய், ஏதோ அவரிடம் ஜோஸ்யம் கேட்பது போல் பேசி அவருடன் நேராகப் பரிசயம் செய்து கொண்டார். இப்படி சில நாட்கள் அவருடைய வீட்டிற்குப் போக்குவரத்தாயிருக்கும் பொழுது ஒரு நாள் அவருடைய வீட்டு வேலையாளிடமிருந்து அவருக்கு ஒரு மூத்தபெண் இருப்பதாயும், அப்பெண் கலியாணமான இரண்டாவது வருடம் விதவையானதாகவும் தெரிந்து கொண்டார்.

பிறகு ஒரு சமயம் ஜோஸ்யர் வீட்டிற்குப் போயிருந்த பொழுது, அவர் வீட்டிலில்லாதிருந்தபடியால் அப்பொழுது அவரது மேஜையின் பேரில் பல ஜாதகக் குறிப்புகள் இருந்ததைக்கண்டு, அவற்றைப் படித்துப் பார்க்கும் பொழுது ஜோஸ்யரது மூத்தப் பெண் ஜாதக் குறிப்பும் முதலியாருக்குக் கிடைக்க அந்த திதி, லக்னம் முதலியவற்றை யெல்லாம் ஒரு சிறு காகிதத்தில் குறித்துக் கொண்டார். பிறகு ஒரு மாதம் கழித்து வேறொரு காகிதத்துண்டில் அந்த ஜோஸ்யருடைய மூத்த பெண் ஜாதகக்குறிப்பையே எழுதி அதற்கு நான்கு மூலைகளிலும் மஞ்சள் இட்டு, மறுநாள் ஜோஸ்யரிடம்போய், அது தன் சகோதரியின் ஜாதகக் குறிப்பென்று சொல்லி அதற்கு ஜாதகபலன் எழுதிக் கொடுக்கும்படி ஐந்து ரூபாய் கொடுத்து அந்த ஜாதகக்குறிப்பையும் கொடுத்தார்.

நடந்த சூது அயறியாத நாயுடு ஜோஸ்யர் உண்மையில் சபாபதி முதலியாருடைய தங்கையின் ஜாதகக்குறிப்பு என நம்பியவராய் அவரது தங்கையைப் பற்றித்தான் முன் அறிந்திருந்த விஷயங்களை எல்லாம் எழுதி, இத்தனைவயதில் இப் பெண்ணுக்கு கலியாணமாயிருக்க வேண்டும், இப் பெண்ணுக்கு இப்பொழுது ஒரு பெண்ணும் ஒரு பிள்ளையும் பிறந்திருக்கின்றன, இன்னும் மூன்று பிள்ளை

களும் மூன்று பெண்களும் பிறக்கப்போகின்றன, மிகுந்த செல்வவதியாய் இருப்பாள், என்று பல நன்மையான விஷயங்களை யெல்லாம் எழுதி, பாக்கி 5 ரூபாயையும் வாங்கிக் கொண்டு அக் குறிப்புக்களை யெல்லாம் ஒரு நோட் புத்தகத்தில் எழுதிக் கொடுத்தார்.

உடனே நமது முதலியார் அதை எடுத்துக் கொண்டு தமது நண்பர் தேசிகாச்சாரியாரிடம் போய் நடந்த சூதைத்தெரிவித்து "விதவையான தன் பெண் ஜாதகக் குறிப்பைக் கொண்டு என் சகோதரியின் ஆயுள் விவரங்களை யெல்லாம் எழுதிக் கொடுத்த ஜோஸ்யருடைய வார்த்தையில் நம்பிக்கை வைக்கலாமா? தன் பெண் கலியாணமானவுடன் இரண்டு வருடங்களுக்குள் விதவையாவாள் என அறியாத ஜோஸ்யருடைய ஜோஸ்யம் என்ன ஜோஸ்யம்? இனியாவது அந்த நாயுடு ஜோஸ்யர் வார்த்தையை நம்பாதீர்கள்" என்று வற்புறுத்தினர்.

தேசிகாச்சாரியாரும் ஜோஸ்யர் வார்த்தையில் நம்பிக்கையற்றவராய் கவலை நீங்கினர். இரண்டு வருஷங்களும் கழிந்தன. பிறகு தேசிகாச்சாரியார் நமது முதலியாரை அழைத்துக் கொண்டு நாயுடு ஜோஸ்யரிடம் போய் நடந்தவை எல்லாம் கூறி, இப்படி அபத்தமாக ஜோஸ்யம் உம்மை யார் சொல்லச் சொன்னது? நீர் இனி இந்த ஊரில் இருந்தால் உமக்கு ஆபத்து என்று சொன்னர்.

அச்சமயம் தேசிகாச்சாரியார் போலீசில் இன்ஸ்பெக்டராயிருந்தபடியால் உடனே நாயுடு ஜோஸ்யர் பாயைச் சுருட்டிக் கொண்டு பக்கத்து ஜில்லா போய்ச் சேர்ந்தார்.

## பதினேட்டாம் கதை.

சென்னையில் கமல விநயகர் கோவிலுக்கு அஷ்டபந்தனம் செய்து கும்பாபிஷேகம் செய்யும்படி ஒரு முறை நமது முதலியார் காலத்தில் நேர்ந்தது. அச்சமயம் மிகுந்த தெய்வபக்தியுள்ள நமது முதலியார் அதற்காக சென்னை வாசிகளிடமிருந்தெல்லாம் பணம் வசூல் செய்து கொண்டுவந்தார். ஏறக்குறைய எல்லா கனவான்

களும் கொடுத்தார்கள். அவ்வூரில் வரதராஜப்பிள்ளை கரிகிருஷ்ணப் பிள்ளை என்று தாயாதிகளான இரண்டு பெரும்லோபிகள் இருந்த னர். இருவருக்கும் ஏராளமான சொத்திருந்த போதிலும் தர்ம சிந்தை யென்பதே இல்லாதவர்கள். எல்லோரிடமும் தர்ம கைங் கர்யத்திற்காக, பணம் வசூல் செய்து கொண்டிருந்த நமது முதலி யார் அவர்களைப்பார்த்து, அவரது அத்யந்த நண்பர்களிற் சிலர் “முதலியாரே! எங்களிடமிருந் தெல்லாம் பணம் வசூல்பண்ணுவ தில் உங்களுக்கு ஒரு பெருமையுமில்லை. நம்முடைய வரதராஜ பிள்ளை, கரி கிருஷ்ணபிள்ளை, இவர்களிடமிருந்து ஒரு பத்து ரூபா யாவது வசூல் செய்யுங்கள் பார்க்கலாம்!” என்று ஏவினார்கள். அதன் பேரில் நமது முதலியார் அவர்களிடமிருந்து எப்படியாவது பத்துப்பத்தாய் வாங்கிவிடுகிறேன் பாருங்கள் என்று சபதம் போட் டார். பிறகு அவ்விருவர்களிடமும் சென்று எவ்வளவோ நயமாகக் கேட்டுப்பார்த்தார். ஒரு பைசாவும் வசூலாகும்வழியைக் காணோம். என்னடா இவர் நம்மை அடிக்கடி தொந்திரவு செய்கிறார் என்று அவர்களிருவரும் ஆலோசனை செய்து, ஒரு யுக்தி செய்தார்கள். மறுமுறை நமது முதலியார் வரதராஜப்பிள்ளையிடம் போய்க்கேட்ட போது, “முதலியாரவாள், என்னைத் தொந்திரவு செய்யாதீர்கள், என் தாயாதி கரி கிருஷ்ணப் பிள்ளையைப் போய் முன்பு கேளுங்கள், அவர் எவ்வளவு போடுகிறாரோ, உடனே அதே தொகை நான் கையொப்பமிடுகிறேன். அவர் என்னை விட பணக்காரர், அவரே போடாதிருக்கும்பொழுது, நான் கையொப்பமிடுவது சரியல்ல; இதுதான் என் கடைசி வார்த்தை. இனி என்னைத் தொந்திரவு செய்யாதீர்” என்றார். அதன் பேரில் முதலியார் கரிகிருஷ்ணப் பிள் ளையிடம் போய்க்கேட்க, அவரும் அதே மாதிரியாக “முதலியாரே! என் தீர்மானத்தைச் சொல்லி விடுகிறேன், வரதராஜப் பிள்ளை என்னைவிட பணக்காரன், அவன் கையொப்ப மிட்டால்தான் நான் கையொப்பமிடுவேன். அவன் முதலில் எவ்வளவு போடுகிறானோ காட்டும், அந்த க்ஷணம் நான் அதே தொகை கையொப்பமிட்டுக் கொடுத்து விடுகிறேன்!” என்றார். நமது முதலியார் பார்த்தார்; இவர்கள் இருவரும் ஒன்றும் கொடாமலிருப்பதற்கு இந்த யுக்தி எடுத்திருக்கிறார்கள்; இவனைக் கேட்டால் அவன் முதலில் கை

யொப்பமிட்டாலொழிய நான் கொடேன் என்கிறான்; அவனைக் கேட்டால் இவன் கையொப்ப மிட்டாலொழிய நான் கொடேனென்கிறான். ஆகட்டும்! இவர்களை ஏமாற்ற எனக்கு யுக்தி தோன்றாமற் போகிறதா? என்று யோசித்து ஒரு சூழ்ச்சி செய்தார். தர்மகைங்கர்யத்திற்காக என்ன செய்தாலும் தவறாகாது என்று தீர்மானித்து, தர்மகைங்கர்யத்திற்காகக் கையொப்பங்கள் வாங்கிவந்த நோட்புஸ்தகத்தில் ஒரு பக்கத்தில் கடைசிவரியில்—இதற்கு முன்பாகப் பன்முறை வேறு காகிதத்தில் அவர் கையெழுத்தைப்போல் எழுதிப்பழகி—வரதராஜப் பிள்ளையின் கையெழுத்தைப் போல் எழுதி—ரூபாய் 100 என்று குறித்துக்கொண்டார். இதைக்கொண்டு போய் கரி கிருஷ்ணப் பிள்ளையிடம் காட்டி, "உங்களிஷ்டப்படியே வரதராஜப் பிள்ளையிடம் முன்பு கையொப்பம் வாங்கிவிட்டேன். இதோ பாரும்; இனி உங்கள் வாக்கின்படி அதே தொகைக்கு நீங்களும் கையொப்ப மிடவேண்டும்" என்று சொல்ல, இனிமேல் என்ன சொல்வது, செய்துதான் தீரவேண்டும், என்று மூக்கால் அழுதுகொண்டு கரிகிருஷ்ண பிள்ளை அப்புஸ்தகத்தின் பக்கத்துப் பக்கத்தில் 100 ரூபாய்க்கு கையொப்ப மிட்டார். இதை உடனே வரதராஜப் பிள்ளையிடம் கொண்டு போய்க் காட்டி "உங்கள் விருப்பத்தின்படியே கரி கிருஷ்ண பிள்ளையிடம் 100 ரூபாய்க்கு கையொப்பம் வாங்கிவிட்டேன், உங்கள் சொற்படி நீங்களும் 100 ரூபாய்க்கு கையெழுத்து போடுங்கள்" என்று வற்புறுத்த அவரும் இனி தப்பும் வழி யில்லை யென்று, தானும் அப்படியே கையொப்ப மிட, உடனே இரண்டு பெயரிடமும் நூறு நூறு ரூபாய் வசூல் செய்து கொண்டு கோயில் அஷ்டபந்தன கும்பாபிஷேகத்தை வெகு விமரிசையாய் நடத்தி விட்டார். பிறகு வரதராஜப் பிள்ளையும் கரிகிருஷ்ணப் பிள்ளையும் ஒருவரையொருவர் சந்திக்க நேர்ந்தபொழுது ஒவ்வொருவரும் மற்றவரை தன் வாக்கினின்றும் தவறி முன்பு கையொப்ப மிட்டதாகக் கடிந்து கொண்டனர். இருவரும் தாங்கள் அப்புஸ்தகத்தில் வாஸ்தவமாய்க் கையொப்ப மிட்டதை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று, ஆயினும் நடந்த சூது இன்னபடி என்றறியவில்லை. கரி கிருஷ்ண பிள்ளை மாத்திரம் பிறகு ஒரு நாள் சந்தேகப்பட்டு கையொப்பப் புஸ்தகத்தைப்

பார்க்கவேண்டுமென்று கேட்க, நமது முதலியார் அதை கும்பாபிஷேக பூர்ணாஹுதியில், மற்றவைகளுடன் ஆஹுதி செய்து விட்டேன் என்று பதில் உரைத்தார்.

---

# ராயர் கதைகள்

## முதற் கதை.

---

தஞ்சாவூரில் திம்மாஜி ராயர் என்கிற ஒரு ராயர் இருந்தார்; அவர் முகத்தைப்பார்க்கும் பொழுதே அவருக்கு அவருடைய தாய் தந்தையர்கள் அப்பெயரிட்ட காரணம் வெளியாகி விடும். அவர் மஹாராஷ்டிர பிராம்மணன், பேசுவது மஹாராஷ்டிர பாஷையாயிருந்த போதிலும் சம்ஸ்கிருதம் ஒன்றும் தெரியாதவர். ஒருநாள் அவர் வீட்டில் அவருடைய தகப்பனார் சிராத்தம் வந்தது. சாஸ்திரப்படி சிராத்தம் எல்லாம் முடிந்த, பிராம்மண போஜன மானவுடன், வந்த பிராம்மணர்களெல்லாம் சாப்பிட்டானவுடன் ராயரை ஆசீர்வாதம் செய்யும் பொருட்டு ஒரு பஞ்சாதி சொன்னார்கள்; இது பிராம்மணர்களுடைய வழக்கம்; அந்த பஞ்சாதியில் "ஆநந்தராய" என்கிற பதம் வந்த பொழுது, உரத்த சப்தமாய் பஞ்சாதி சொல்லிக்கொண்டிருந்த பிராம்மணர்களைப்பார்த்து, "ஓய் பிராம்மணர்களே! நிறுத்துங்கள் போதும்!" என்று கூச்சலிட, அவர்கள் என்னமோவென்று விசாரிக்கும் பொருட்டு, அதனுடன் பஞ்சாதியை நிறுத்தினார்கள். அதன் மீது நமது ராயர் அவர்கள் "ஓய்! பிராம்மணர்களே! இதென்ன நியாயம்? நான் உங்களுக்கெல்லாம் தட்சிணை முதலியன கொடுத்து, திர்ப்தியாக சாப்பாடு போட்டிருக்க, என் பெயரைச் சொல்லி வாழ்த்தாமல் பக்கத்து வீட்டு, என் விரோதியாகிய ஆநந்தராயரை வாழ்த்துகிறீர்களே இதென்ன நியாயம்?" என்று அவர்களைக் கடிந்துகொண்டார். அதன் பேரில் சிராத்த போஜனமுண்ட பிராம்பணர்களில் வயதானவர் ஒருவர் "அது அப்படியல்ல திம்மாஜி ராயரே, இந்த பஞ்சாதியில் ஆநந்தராய என்று வருகிற

பதம் உம்முடைய பக்கத்து வீட்டுக்காரரைக் குறிப்பதல்ல" என்று சொல்லி அந்த பஞ்சாதிக்கு அர்த்தம் எடுத்துச்சொன்னர். பிறகு தான் நமது ராயர் மனம் திர்ப்தி அடைந்தது.

## இரண்டாம் கதை.

தஞ்சாவூரிலுள்ள பிள்ளைகள் கொஞ்சம் துஷ்ட சுபாவ முடையவர்கள்; அவர்களில் சிலருக்கு நம்முடைய ராயருக்கு சம்ஸ் கிருதம் தெரியா தென்பது நன்ருய்த் தெரியும். அவர்களில் இருவர் ஒருநாள் நமது ராயரைக் கோட்டா (எழுத்தாளி) பண்ணுவதற்காக, வால்மீக ராமாயணம் ஒன்றை எடுத்துக்கொண்டு வந்து அவரிடம் காண்பித்து "ராயர் அவர்கள், இதில் 'ராமோ லட்சுமணம் அப்ர வீத்" என்றிருக்கிறதே, அதற்கு எங்களுக்கு அர்த்தமாகவில்லை, கொஞ்சம் தயவு செய்து அதற்கு அர்த்தம் சொல்லவேண்டு மென்று கேட்டார்கள் ; (சம்ஸ்கிருதம் தெரிந்தவர்களுக்கு இதற்கு அர்த்தம் சொல்வது கடினமல்ல)—இதற்கு ராமர் ஆனவர் லட்சுமண ரைப்பார்த்து சொன்ஞர், என்று அர்த்தமாகும். நமது ராயருக்கு சுட்டுப்போட்டாலும் சம்ஸ்கிருதத்தில் ஒரு பதத்திற்கும் அர்த்தம் தெரியாது; ஆனாலும் தனக்கு சம்ஸ்கிருதத்தில் ஒன்றும் தெரியாது என்று அப்பிள்ளைகளிடம் காட்டிக்கொடுக்க இஷ்டமில்லை. ஆகவே, இப்படிகொடுங்கள் என்று அந்த ராமாயணத்தை வாங்கிக்கொண்டு மூக்குக்கண்ணுடியை மூக்கில் போட்டுக்கொண்டு, அதைப்படித்துப் பார்ப்பவர் போல் பாசாங்கு செய்து சற்று யோசித்து, பிறகு அந்த சுலோகத்திற்கு வியாக்கியானம் அடியில் வருமாறு செய்தார். "ராமோ-என்ருல் ராமதேவர் ஆயித்து (ஆச்சுது)-லட்சுமணம், லட் சுமணதேவராயிற்று, அப்ர என்ருல்?—ஆ! இப்பொழுது தெரிகி றது, ராம லட்சுமணர்களோடு எந்நேரமும் இருப்பவர், முக்கியப் பிராண தேவராகிய அனுமந்த தேவர் ஆயித்து! (மாத்வப் பிராம் மணர்களுக்கு ஹனுமான் ஒரு முக்கியமான தெய்வம் என்பதை கவனிக்க) வீ என்ருல் கொஞ்சம் அர்த்தம் பண்ணுவது கஷ்டமா யிருக்கிறது—ஒகொ! இப்பொழுது அர்த்தமாகிற்று, "வீ என்ருல் ஹனுமந்த தேவரது புச்சம், வாலைக்குறிக்கிறது!" என்று சொல்லி

முடித்தார். அந்த இரண்டு பிள்ளைகளில் ஒருவன் "ராயரே! எல்லாம் சரிதான் ஆயினும் கடைசியில் வீ, க்கு அப்புறம் 'து' இருக்கிறதே அதற்கு அர்த்தம் சொல்லவில்லையே" என்று கேட்டான். இதனுடன் தொல்லை யொழிந்தது என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்த நமது ராயர் பார்த்தார். "இதென்னடா இதொரு சங்கடம் இன்னும் இருக்கிறதே" என்று மிகவும் யோசித்தவராய், கடைசியில் "ஆ!—இப்பொழுது ஸ்பஷ்டமாகிறது! அந்த ஹனுமந்த தேவருடைய வாசில் ஒரு கண்டாமணி கட்டியிருக்கிறதல்லவா? அந்த மணி, சப்திக்கும்பொழுது "து! து! து!" என்று சப்திக்கிறது! அதைத்தான் இந்த ஸ்லோகம் எழுதின வால்மீகி முனிவர் கடைசி எழுத்தினுல் குறிக்கிருர்!" என்று சொல்லி முடித்தார். அதன் பேரில் வந்த பிள்ளைகளில் மற்றொருவன் "பார்த்தாயடா, நான் சொன்னேனே, சம்ஸ்கிருதத்தில் நமது சந்தேகங்களைத் தெரிவிக்க நமது ராயருக்கு மிஞ்சினவர்களில்லை! இப்படி ஸ்பஷ்டமாக யார் ராமோ லட்சுமணம் அப்ரவீத் என்பதற்கு வியாக்கியானம் சொல்வார்கள்!" என்று ராயரைப் புகழ்ந்து விட்டு விடை பெற்றுக்கொண்டு, வீட்டிற்குப் போய் அரைமணி சாவகாசம் இந்த வியாக்கியானத்தை நினைத்துக்கொண்டு சிரித்ததாகக் கேள்விப் படுகிறேன் நான்; அது எவ்வளவு வாஸ்தவம் என்று மாத்திரம் என்னுல் சொல்ல முடியாது.

## மூன்ரும் கதை.

நமது திம்மாஜி ராயர் அவர்களுக்கு இரண்டு தாரங்கள். மூத்தாளுக்கு பிள்ளை யில்லை யென்று இளையாள் ஒருத்தியைக் கலியாணம் செய்து கொண்டார். இளையாளைக் கலியாணம் செய்து கொண்ட பிறகு மூத்தாளுக்கு ஒரு பிள்ளை பிறந்தது, அந்த பிள்ளைக்கு ஆண்டு நிறைவு சடங்கை விசேஷமாக நடத்தினுர். அச்சமயம் ஆயுஷ் ஹோமம் செய்த வாத்தியார் அந்தச் சடங்கை நடத்துகையில் அடிக்கடி "சஹகுடும்பாளும்" என்று சொல்லிக்கொண்டு வந்தார்; இதற்கு குடும்பத்துடன் என்று பொருள்படும். நம்முடைய ராயருடைய இளையாளுக்கு ராயருக்கு எவ்வளவு சம்ஸ்கிருதம் தெரி

யுமோ அவ்வளவு தான் தெரியும். சஹகுடும்பானும் என்று வாத்தியார் சொல்லும் போதெல்லாம் மூந்தாளை மாத்திரம் சேர்த்துக்கொண்டு வாத்தியார் மந்திரம் சொல்லுகிறார் என்று மனதில் தீர்மானித்து விட்டாள். இரண்டு மூன்று முறை பொறுத்துக்கொண்டிருந்தவள், பிறகு பொறுக்க முடியாமல் மற்றொரு சமயம் வாத்தியார் 'ஸஹகுடும்பானும்' என்று சொன்ன பொழுது "வாத்தியாரே! நானும் ராயர் அவர்களுக்கு ஒருதாரம் தான்" என்று சொன்னாள். வாத்தியார் இந்த மந்திரத்தைப்பற்றி இதைச் சுட்டிச் சொல்கிறாள் என்று அறியாதவராய் மேலே மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு போனார். மறுபடியும் அவர் 'சஹ குடும்பானும்' என்று சொன்ன பொழுது இளையாளுக்குக் கோபம் வந்ததைக் கண்டு நமது ராயர் அவர்கள் "ஓய்! வாத்தியாரே இவளும் என்னுடைய சம்சாரம் காணும், ஒரு குடும்பானும் மாத்திரம் சொல்கிறீர்களே என்ன?" என்று கோபித்து மொழிய, வாத்தியார் பார்த்தார். இதேது எல்லாம் நிரட்சரகுட்சிகளாயிருக்கிறது, இவர்கள் மனதை வேறு விதத்தில் திர்ப்தி செய்ய முடியாதென்று நினைத்தவராய் மறுமுறை "சஹகுடும்பானும்' என்று சொல்ல வேண்டி வந்த சந்தர்ப்பத்தில் "குடும்பானும்" என்று உரக்க சொல்லி முடித்து "இப்பொழுது சம்மதந்தானே ராயர் அவர்கள்?" என்று அவரைக் கேட்க அவரும் அவருடைய இளையாளும் மிகவும் திர்ப்தி அடைந்தனர். வாத்தியாருக்கு அன்றைத்தினம் இரட்டிப்பு சன்மானம் கிடைத்தது.

## நான்காம் கதை.

நமது ராயர் வீட்டில் வீட்டுவாசல் காவலுக்காக ஒரு துலுக்க ஜவானை ஏற்படுத்திருந்தார். அவன் கொஞ்சம் வயதானவன்; அவன் வேலை இரவு பகலாக வீட்டு வாயிலண்டை காவலிருக்க வேண்டியதுதான்; ராயர் வீட்டில் எல்லோரும் சாப்பிட்டானவுடன் அவனுக்குச் சாப்பாடு போடுவார்கள். அதைச் சாப்பிட்டுவிட்டு அவன் காவல் வேலை பார்ப்பான். அவன் புதிதாய் வேலையில் அமர்ந்தவுடன் ஒரு ஏகாதசி தினம் வந்தது. அன்றைத்தினம் ராயர் வீட்

டில் குழந்தை குட்டி முதல் எல்லோரும் உபவாசம்; அடுப்பை மூட்டுகிறதுமில்லை. இரவில் நமது துலுக்க ஜவானுக்கு சாப்பாடு போடுகிற வேளை வந்ததும், வீட்டிலிருந்தவர்களை வழக்கம்போல் சாப்பாடு போடும்படி கேட்க, அவர்கள் இன்று ஏகாதசியாகையால் சாப்பாடு கிடையாது, நாங்களெல்லோரும் பட்டினியிருக்கிறோம், நீயும் பட்டினி யிருக்கவேண்டியதுதான் என்று சொன்னார்கள். சாயபுக்கு மிகவும் துக்கமாய்ப் போயிற்று. கஷ்டப்பட்டு பசியை யடக்கிக் கொண்டு நித்திரை போய் விட்டான். மறுநாள் துவாதசியாகையால் அதிகாலையில் எழுந்திருந்து வீட்டிலுள்ளவர்கள் சமயல் செய்து சாப்பிட்டு விட்டு, ஐயோபாபம்! இவனும் நம்முடன் பட்டினி யிருந்தானே என்று பரிதாபப்பட்டவர்களாய், சாயபை எழுப்பி, பட்சணங்களுடன் துவாதசி பாரணை சாப்பாடு போட்டார்கள். ஒரு நாளெல்லாம் பசியோடிருந்த சாயபு, மிகவும் சந்தோஷமாய்ப் புசித்துவிட்டு, இன்றைக்கு என்ன விசேஷம் என்று கேட்க, இன்று 'துவாதசி' என்று வீட்டிலுள்ளவர் விடைபகர்ந்தனர். "அரெரெ! இந்த ஏகாதசி பக்கீ இருக்கறானே! அவன் நம்ப துவாதசி மஹாராஜ் கால் பிடிக்கணும் சாமி"! என்று சொல்லிவிட்டு, அது முதல் "சாமி, நப்போ துவாதசி மஹாராஜ் நம்போ ஊட்டுக்கு எப்போ மறுபடி வர்ரார்?" என்று விசாரித்துக்கொண்டிருந்தான்.

## ஐந்தாம் கதை.

நம்முடைய ராயருடைய தாராளத்தைப் பற்றி நான் அதிகமாய்ச் சொல்ல வேண்டியதில்லை. தாராளத்தண்ணீர் பந்தல்தான்; பணம் பெறுவதென்றால் கைகள் எவ்வளவு வேண்டுமென்றாலும் நீளும்; பணம் கொடுப்பதென்றால் மிகவும் குருகிப்போம், பெரும்பாலும் மறைந்தே போகுமென்று சொல்லலாம். ஒரு நாள் வெயிற் காலத்தில் காற்றுக்காக அவர் முற்றத்தில் பாயைப்போட்டு படுத்துக்கொண்டிருந்த பொழுது ஒரு நாயானது அவர் காலைக் குதித்துத் தாண்டிக்கொண்டு போயிற்று. நமது ராயருக்கு சகுனங்களில் அதிக நம்பிக்கையுண்டு. அவர் எங்கேயோ, நாயானது நமது உடலைத் தாண்டிக்கொண்டு போனால்

அது மிகவும் கெட்ட சகுனம் என்று கேள்விப்பட்டிருந்தார். உடனே அவருக்குக்கவலே அதிகமாயிற்று. இரவெல்லாம் இதற்கு என்ன செய்வது என்று யோசித்துப் பார்த்தார். மறுநாள் காலே வடக்கே யிருந்து ஜோஸ்யம் முதலிய சாஸ்திரங்கள் உணர்ந்த ஒரு தெலுங்கு பிராம்மணன் அவரிடம் யாசகத்திற்கு வந்தார். இதுதான் சமயம் என்று எண்ணி, அவரிடம் முந்திய தினம் சாயங்காலம் ஒரு நாய் தன்உடலேத் தாண்டிப்போன சமாசாரத்தைச் சொல்லி இதற்கு என்ன பிராயச்சித்தம் செய்வது என்று விசாரித்தார். ராயருடைய லோபி குணத்தையும் சம்ஸ்கிருதம் தெலுங்கு இரண்டு பாஷைகளிலும் ஒன்றும் தெரியாமையையும், அறிந்த அந்த பிராம்மணன் "ஐஐயோ! அது பெரும் பாபமாயிற்றே! 'குக்க குக்கஸ்ச தாண்டிதே மாறி தாண்டிதே, ராயர் ராயர் ஸ்சைவ, நாசனம் குடும்ப நாசனம்!" என்று நமது சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறதே, இது பெரும் அபாயமாயிற்றே' என்று காபுரா பண்ணினர். அதன் பேரில் மிகவும் பயந்தவராய் ராயர் அவாள், எப்படியாவது இதற்குப் பரிகாரப் பிராயச்சித்தம் சொல்லவேண்டுமென்று வற்புறுத்தவே, பிராம்மணன் "ஆனல் வேறு வழியில்லே, அந்த நாயைப்போல் பொன்னல் ஒரு நாயின் உருவம் செய்து, அதை ஒரு பிராம்மணனுக்கு தானம் செய்யவேண்டும்" என்று சொன்னர். ராயர் பார்த்தார்; இதென்னடா கஷ்டமாயிருக்கிறதென்று, நாளேக் காலே வாருங்கள் சொல்லுகிறேன் என்று அவரை அனுப்பி விட்டார். பிராம்மணன் நாளேக்குக் காலே நமக்கு பொன்னலாகிய நாய் கிடைக்கப்போகிறதென்று சந்தோஷப் பட்டுக்கொண்டு தன் இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்.

மறுநாள் பொழுது விடிந்ததோ என்னவோ பிராம்மணன் ராயரிடம் வந்து சேர்ந்தார். நமது ராயர், "நேற்று ராத்திரியெல்லாம் யோசித்துப் பார்த்தேன் ஸ்வாமி, பொன்னல் ஒரு பெரிய நாயைப் போல் செய்து தானம் கொடுக்க சக்தி யில்லாமலிருந்தால் ஒருவன் என்ன செய்வது?" என்று மெல்ல கேட்டார். அதற்கு பிராம்மணன் "ஆனல் வெள்ளியினலாவது செய்து கொடுக்கவேணும்" என்று பதில் உரைத்தார். மறுநாள் பிராம்மணன் வந்தபொழுது "வெள்ளியாலும் செய்து கொடுக்கமுடியாமற் போனல் என்ன செய்வது?"

என்று கேட்க "வெண்கலத்தினாலாவது செய்து கொடுக்கவேண்டு" மென்று சொன்னார். இப்படி நாளுக்குநாள் படிப்படியாக குறைத்துக் கொண்டுவந்து கடைசியில் "பெல்லத்தினாலாவது செய்து கொடுக்க வேண்டும்" என்கிற பதிலை பிராம்மணன்வாயினின்றும் வர வழைத்துக்கொண்டார். மறுநாள் வழக்கப்படி பிராம்மணன் இதாவது நமக்குக் கிடைக்கட்டும் என்று ஆவலுடன் வந்தபொழுது, நமது ராயர் பெல்லத்தினால் ஒரு சிறு நாய்க் குட்டியைப் போல் செய்து அவர் எதிரில் வைத்தார். பிராம்மணன் "என்ன ராயரே இவ்வளவு சிறியதாகச் செய்தீரே?" என்று கேட்க "என் காலைத்தாண்டிச் சென்ற நாய் மிகவும் சிறியது தான்" என்று பதில் உரைத்தார். பிராம்மணன், சரி இன்றைக்கு சாப்பிட இவ்வளவு பெல்லமாவது கிடைத்ததே என்று மகிழ்ந்து பிராயச்சித்தக் கிரியைக்கு ஆரம்பம் செய்து விக்னேஸ்வரர் பூஜை செய்யவேண்டி பிள்ளையார் பிடிக்க கொஞ்சம் பெல்லம் கேட்டார். ராயர் மெல்ல நாயின் வாலைக்கிள்ளி அந்த பெல்லத்தைக்கொடுக்க, பிராம்மணன் வாலில்லா நாயையா தானம் கொடுப்பது என்று வினவ, அதற்கு "என்னைத் தாண்டின நாய்க்கு வாலே யில்லை" யென்று சாதித்தார். இதற்கு மேல் ஒன்றும் செய்யத் தெரியாதவராய் பிராம்மணன் பிள்ளையாராக அந்த வால் பெல்லத்தைப் பிடித்து வைத்து விக்நேஸ்வர பூஜை செய்தார். அதன் முடிவில் விக்நேஸ்வரருக்கு நைவேத்யம் செய்யவேண்டு மென்று ஏதாவது கேட்க, ராயர் பெல்லப் பிள்ளையாரின் பின்பக்க மிருந்து ஒரு சிறிது வெல்லத்தைக் கிள்ளி அவரிடம் கொடுத்தார். "இதென்ன ராயரே இப்படிச் செய்யலாமா?" என்று கோபிக்க "ஸ்வாமி, உரக்கக் கூவாதீர், பிள்ளையாருக்கு பின்பக்க மிருப்பது தெரியாது, அவர் திரும்பிப் பார்க்க முடியாது" என்று சமாதானம் சொன்னார். பிறகு பிராயச்சித்த மந்திரங்களை யெல்லாம் பிராம்மணன் சொல்லி முடித்த பின், ராயர் "என்ன ஸ்வாமி, நாய் என் காலைத் தாண்டின பாபம் போய்விட்டதா?" என்று விசாரிக்க பிராம்மணன் "போய்விட்டது" என்று பதில் சொல்ல, அதை மும்முறை சொல்லும்படி கேட்க பிராம்மணனும் "போய்விட்டது, போய்விட்டது போய்விட்டது!" என்று மூன்று முறை மொழிந்தார். உடனே அங்கு இலையில் நாய்க்குட்டி போல் செய்து வைத்திருந்த

பெல்லத்தை ராயர் வாயில் "அபுக்!" என்று போட்டுக்கொண்டார். பிரமித்தார் பிராம்மணன்! "என்ன ஐயா! இப்படி செய்தீர்களே! இது பாபமல்லவா?" என்று கேட்க, ராயர் "பெரிதல்ல, நாய்க்குட்டி காலைத்தாண்டினபாபம் உம்மைச் சேரட்டும், பெல்லத்தைத் தின்ற பாபம் என்னைச் சேரட்டும்!" என்று தைரியம் சொன்னார். ஏழை பிராம்மணன் என்ன செய்வார் பாபம்! என்னடா இது துர் அதிர்ஷ்டம் என்று மனம் வருந்தினவராய், ராயருடன் மன்றாடி புட்டம் கிள்ளப்பட்ட வெல்லப் பிள்ளையாரையாவதுகொடும் என்று வாங்கிக்கொண்டு போய் தன் வீடு சேர்ந்தார்.

# தீபாவளி ஸ்நான கதை.

இது கட்டுக்கதையல்ல, வாஸ்தவமாய் நடந்த கதை. சுமார் 40-வருஷத்துக்குமுன் நடந்தது. அச்சமயம் சென்னையில் ஒரு பாகமாகிய மயிலாப்பூரில் இப்பொழுது இருப்பதுபோல் சாக்கடைக் கால்வாய்கள் கிடையாது. ஒவ்வொரு வீட்டிற்கு எதிரிலும் மூன்று நான்கு அடி ஆழமான சிறு கிணறுகள் வெட்டப்பட்டிருந்தன. அந்தந்தவீட்டின் சாக்கடைத் தண்ணீரெல்லாம் தினம் அதில் சேர்க்கப்படும். ஆகவே அச்சிறு கிணறுகளில் என்னென்ன துர்க்கந்தமான வஸ்துக்களெல்லாம் சேருமென்று நான் குறிப்பிட வேண்டியதில்லை. இக்கிணறுகளை யெல்லாம் சாதாரணமாக ஒருவாரத்திற்கு ஒருதரம் தான் முனிசிபாலிட்டியார் சுத்தப் படுத்துவார்கள். அதாவது அவைகளிலிருக்கும் கெட்ட ஜலம் முதலியவற்றை யெல்லாம் தொட்டிகளைக்கொண்டு இறைத்து தங்கள் வண்டிகளில் கொண்டுபோய் விடுவார்கள்.

இக்கதை நடந்தேறிய ஒருவருஷம் ஒரு வீட்டிற்கு எதிராகயிருந்த நடுக்கிணற்று நீரை ஒருவாரம் வரையில் எடுக்காதிருந்தார்கள். தீபாவளியானவுடன் மறுநாள் எடுக்கலாமென்று இருந்தார்கள் போலும். இக் கிணறுகளின்பேரில் சாதாரண ஒரு துண்டு பலகையைப் போட்டு மூடியிருக்கும் அவற்றிலுள்ள துர் நாற்றம் வெளி

வராதபடி. இச்சமயம் இந்த கிணற்று மூடிப் பலகையை யாரோ களவாடிக்கொண்டு போய்விட்டார்கள். தீபாவளி ராத்திரியில் ஒரு வாலிபன், ஸ்நானம் செய்துவிட்டு, புது வேஷ்டிகளெல்லாம் கட்டிக் கொண்டு, பலகாரம் சாப்பிட்டுவிட்டு தன் மாமியார் வீட்டிலிருந்து புறப்பட்டு, வெற்றிலைபாக்கு போட்டுக்கொண்டு "ஓரமணீமனசாமினி" யென்னும்பாட்டை மெதுவாய்ப் பாடிக்கொண்டு உல்லாசமாக வீதிவழியாக பெரும் நடையாக தன் தாயார் வீட்டிற்குப்போய், மாமியார் வீட்டில் தனக்கு நடந்த தீபாவளி மரியாதையை யெல்லாம் தெரிவிக்க வேண்டுமென்று மேலே பார்த்துக்கொண்டு நடந்து வந்தான். வருகிறவழியில் ஒருசாராயக் கடைக்குப்போய் இரண்டுடிராம் சாராயத்தை இடம் மாற்றிக்கொண்டான், அதாவது, புட்டியிலிருப் பதை தன் வயிற்றிற்குள் மாற்றிவிட்டான். அந்த போதையினாலோ அல்லது அதிகாலையா யிருந்தபடியால் இருட்டினாலோ அக் கிணறு திறந்திருப்பதை கவனியாதவனாய், பாடிக்கொண்டிருந்த பல்லவியின் மத்தியில், சாக்கடை பள்ளத்தில் தொபீல்! என்று விழுந்தான். மார்பளவு சாக்கடை சேற்றில் அமிழ்ந்துவிட்டான்! அப்பொழுது அவனது உடம்பும் தீபாவளி புது வேஷ்டி முதலியவையும் என்ன மாதிரியிலிருந்தது என்று நான் இங்கு விவரிக்க வேண்டிய அவசியமில்லை.

நம்முடைய வாலிபன் என்ன செய்வான் பாபம்! தானாக அச் சாக்கடை குழியினின்றும் வெளிவரவும் முடியவில்லை; கூச்சல் போட்டு மற்றவர்களை கூப்பிடவும் வெட்கமாயிருந்தது; இதற்குள்ளாக அக்கம் பக்கத்திலிருந்த வீட்டுக் காரர்களெல்லாம் சாக்கடையில் விழுந்த சப்தத்தைக் கேட்டு சிலரும், அதனால் உடனே உண்டான துர்க்கந்தத்தை சகியாமல் பலரும் கும்பல் கூடினர். பிறகு நமது பிள்ளையாண்டானிருக்கும் நிலையைக்கண்டு பரிதவித்தவர்களாய் அவனை அப்படுகுழியினின்றும் கரையேற்றப் பிரயத்தனப் பட்டனர். ஆயினும் இதில் ஒரு பெரும் கஷ்டம் நேர்ந்தது, அவனது உடம்பெல்லாம் சாக்கடைசேற்றினால் பூசப்பட்டிருந்ததால் அவனை பிடித்து வெளியேறச் செய்வதற்கு சங்கோசப்பட்டனர். கடைசியாக யோசித்து ஒரு பெரிய தாம்பு கயிற்றைக் கொண்டுவந்து, சற்று தூரத்திலிருந்து அதன் முனையை அவன் பேரில் எறிந்து

அதை அவன் பிடிக்கசெய்து மெல்ல இழுத்து அவனைக் கரை யேற்றினார்கள். வெளிவந்த தீபாவளி விருந்து மாப்பிள்ளை தலை குனிந்துகொண்டு ஒருவர் முகத்தையும் பாராமல் நேராக கோயிலுக்குப் பின்புறமிருக்கும் குளத்திற்கு விரைந்துபோய் அதில் மூழ்கி ஸ்நானம்செய்து தன்பேரிலிருந்த சேற்றையும் துர்க்கந்தத்தையும் ஒருவாறு போக்கிக்கொண்டு தீபாவளி புது வஸ்திரங்களையும் தோய்த்துக்கொண்டு தன் வீடுபோய்ச் சேர்ந்தான். அச்சமயம் அங்கிருந்த அவனது அண்ணன் தம்பிமார்களும், சகோதரிகளும் அவனது அழுக்குப்படிந்த வேஷ்டி உத்தரீயத்தைக் கண்டு, இதுதானு உன் மாமியார் வீட்டில் தீபாவளிக்கு கொடுத்த புது வேஷ்டி அங்கவஸ்திரம் என்று ஏளனம் செய்தனர். மாப்பிள்ளை என்ன செய்வான் பாபம்! தலைவிதி என்று ஏங்கிவிட்டு அவைகளை களைந்து எரிந்துவிட்டு, மறுபடியும் குழாய் ஜலத்தில் ஸ்நானம் செய்து வேறு சலவைத் துணிகளை உடுத்திக்கொண்டான்.

ஆனல் ஒன்று; மற்றவர்களுக்கெல்லாம் தீபாவளி ஸ்நானம் ஒன்று என்றால், நம்முடைய பிள்ளையாண்டானுக்கு அன்று நான்கு ஸ்நானங்கள் கிடைத்தன. ஒன்று மாமியார்வீட்டில் வென்னீர் ஸ்நானம்; இரண்டு சாக்கடை தொட்டி ஸ்நானம்; மூன்று கபாலீஸ்வரர் குளத்துத் தண்ணீர் ஸ்நானம்; நான்காவது முனிசிபல் குழாய் ஜல ஸ்நானம்! ஒருவிதத்தில் அவன் அதிர்ஷ்டசாலிதான்.

ஆயினும் அச் சாக்கடை கிணற்றிலிருந்து வெளிவந்த சேற்றின் துர்க்கந்தம் போவதற்காக, அத்தெருவில் அருகிலிருந்த ஒரு போலீஸ் உத்யோகஸ்தர், போலீஸ் பைர் என்ஜின் (Fire Engine) ஒன்றை வரவழைத்து அதன் குழாயைக் கொண்டு அத்தெருவை இருபது அடி தூரத்திற்குக் கழுக வேண்டியதாயிற்று.

இக்கதையினுல் இதைவாசிக்கும் என் இளைய நண்பர்கள் அறியவேண்டிய விஷயம் ஒன்று. எப்பொழுதும் நடக்கும்பொழுது மேலே பார்த்துக்கொண்டு நடக்க கூடாதென்பது; இரண்டு, சாராயக் கடைக்குள் புகலாகாதென்பதாம்!

# பொய்யே இல்லாத கதை.

மாமண்டூர் என்னும் ஊரில் ஒரு வஸ்தாதி இருந்தான். அவன் பெயர் மாமண்டூர் முண்டன் என்பதாம். அவன் குஸ்தி பிடிப்பதில் மிகவும் கெட்டிக்காரன். ஆள் 8 அடி உயரமிருப்பான். உயரத்திற்குத் தகுந்த புஜம் முதலியன வெல்லாம் உடையவனு யிருப்பான். அவன் காலையில் எழுந்தவுடன் பல் விளக்குவதற்காக இரண்டு ஆலமரங் களைப் பிடுங்கி, அவைகளைக்கொண்டு அப்படியே பல் விளக்கிக் கொள்வது வழக்கம். இவன் குஸ்தியில் நம்மைத் தோற்கடிக்கக் கூடி யவர்கள் இவ்வுலகிலேயே இல்லையென்று இருமாந்திருந்தான். ஒரு நாள் தன் ஊருக்குச் சுமார் பத்து மயிலுக் கப்பாலுள்ள காமண்டூர் என்னும் கிராமத்தில் ஒரு பெரிய வஸ்தாதி யிருப்பதாயும், அவன் பெயர் காமண்டூர் குண்டன் என்றும், அவன் தன்னை ஒருவராலும் குஸ்தியில் ஜெயிக்க முடியாதென்னும் கொடிகட்டி யிருப்பதாயும் கேள்விப்பட்டான். அதன்பேரில் நம்முடைய மாமண்டூர் ஆசாமிக்கு கோபமும் பொறாமையும் பிறந்தது. உடனே அவ்வூருக்குப்போய் அவனைத் தோற்கடிக்க வேண்டுமென்று தீர்மானித்து அதிகாலையில் எழுந்திருந்து காமண்டூர் போய்ச் சேர்ந்தான். அச்சமயம் காமண்டூர் குண்டன் வீட்டிலில்லாதிருக்க அவன் பிள்ளையை 'உன் தகப்பன் எங்கே' யென்று கேட்க, அப்பிள்ளை 'என் தகப்பனுர் காலையில் பல் துலக்க இரண்டு மலைகளைப்பிடுங்கி ஒன்றோடொன்றை மோதி தூள் ஆக்கி அந்தத்தூளைக்கொண்டு பல் துலக்குகிறது வழக்கம். இங்கு எங்கள் ஊருக்கு அருகாமையிலுள்ள மலைகளையெல்லாம் இவ்வாறு பொடியாக்கிவிடவே கொஞ்சம் தூரத்திலுள்ள இரண்டு மலைகளை நாடிப் போயிருக்கிறுர்' என்று தெரிவித்தான். இதைக் கேட்ட வுடன் நமது மாமண்டூர் முண்டனுக்கு ஆச்சரிய முண்டாகி எப்படி யும் அப்படிப்பட்ட வஸ்தாதியைப் பார்க்க வேண்டுமென்று ஆவல் உண்டாக அங்கே தங்கியிருந்து காமண்டூர் குண்டன் திரும்பி வந் ததும் அவனை சந்தித்தான். சந்தித்ததும் தான் வந்த காரியத்தை சொல்லி, அவனை மற்போருக்கு அழைக்க, இருவருமாக அவ்வூ ருக்கு அருகாமையிலுள்ள நீர் வற்றிப்போன ஒரு பெருங் குளத்தி

லிறங்கி, குஸ்திபிடிக்க ஆரம்பித்தார்கள். காலையில் குஸ்திபிடிக்க ஆரம்பித்தவர்கள் மத்தியானம் பன்னிரண்டு மணியாகியும் தோல்வி ஜெயிப்பின்றி, மூச்சு விடாமல் குஸ்தி பிடித்துக் கொண்டிருந்தார்கள். அந்த குளத்துக் கப்பாலுள்ள ஒரு தென்னந் தோப்பில் பயிர் வேலை செய்துகொண்டிருக்கும் தன் பேர பிள்ளைக்கு ஒரு இடைச்சி தினம்தோறும் மத்தியானம் பன்னிரண்டு மணிக்கு அக் குளத்தின் வழியாக இறங்கிப்போய் சாப்பாடு கொடுப்பது வழக்கம். அந்த கிழவிக்கு 99 வயது. தள்ளாத கிழவி. அவள் தலைமீது பன்னிரண்டு பானைகள் அடுக்கி அப்பானைகளில் பேரப்பிள்ளைக்கு 12 விதமான சாப்பாடு வைத்துக்கொண்டு போகிறவள். குளத்தண்டை வந்தபொழுது அதில் இரண்டு பூதங்களைப்போல், மாமண்டூர் முண்டனும் காமண்டூர் குண்டனும் குஸ்தி பிடிப்பதை கண்டாள். தலை நடுங்கிகொண்டிருக்கும் அத்தள்ளாத கிழவி என்ன செய்வாள் பாவம்! கொஞ்ச நேரம் நின்றுபார்த்தாள்; குஸ்தி நிற்கிறதாகக் காணோம். பேரப்பிள்ளைசாப்பிடும் நேரமோ ஆய்விட்டது. அவன்கோபித்துக்கொண்டு மூச்சுவிட்டானாயின் குடியிருந்த வீட்டின் கூரையெல்லாம் எரிந்து போகும். அப்படிப்பட்ட கோபக்காரன்! ஆகவே கிழவி ஒரு யுக்தி செய்தாள். அந்த மல்லர்கள் இருவர்களையும் கூவியழைத்து 'அப்பா! எனக்கு நேரமாகிறது. நான் இக்குளத்தைக் கடந்து அப்பாலிருக்கும் தென்னஞ் சோலைக்குப் போய் என் பேரப்பிள்ளைக்கு சாப்பாடு போடவேண்டும். உங்கள் குஸ்தி என்னமோ சீக்கிரம் முடிகிறதாகக் காணோம். நான் ஒரு யுக்தி சொல்லுகிறேன் அதன்படி செய்யுங்கள். நீங்களிருவரும் அப்படியே என் தோள்மீது ஏறிக்கொள்ளுங்கள். அங்கிருந்து குஸ்தி பிடியுங்கள். ஆனால் ஒன்று. என் தலைமீது வைத்திருக்கும் பன்னிரண்டு பானைகளில் ஒருபானையும் உடையக்கூடாது' என்று சொன்னாள். அந்த மல்லர்களும் சரிதான் என்று ஒப்புக்கொண்டு ஒவ்வொருவரும் அக்கிழவியின் தோள்மீது ஏறிக்கொண்டு முன்போல் குஸ்தி பிடிக்க ஆரம்பித்தார்கள். கிழவியும் குளத்தில் நமக்குப் போக வழி கிடைத்தது என்று சந்தோஷப்பட்டவளாய், அந்த இரண்டு மல்லர்களையும் அப்படியே தூக்கிக்கொண்டு குளத்தைக் கடந்து அப்புறமுள்ள சோலையருகில் போனாள். போகும்பொழுது

அவனுடைய பேரப்பிள்ளை பன்னிரண்டு மணிக்குமேல் ஆய்விட்டபடியால் பசியால் துடித்துக்கொண்டிருந்தவன் தன் பாட்டி தூரத்தில் வருவதையும் அவள் தோள்மேல் இரண்டு பூதங்கள் இருப்பதையும் கண்டவனாய், இதென்ன ஆச்சரியமென்று அங்கிருந்த ஒரு சிறுமலைமீது ஏறிஓடினான். கிழவி அவனைப் பின்தொடர்ந்தாள். இருவரும் ஓட, கடைசியாகப் பேரப்பிள்ளை அம்மலைமீதிருந்த ஒருதென்னை மரத்தின்மேல் ஏறிக்கொண்டான். கிழவி பாவம் மரம் ஏறத்தெரியாது திகைத்து, கீழே நின்று, கீழிருந்து நடந்த வரலாற்றை சொல்லி தன்னையும் மரத்தின் உச்சியில் ஏற்றிக்கொள்ளும்படி பேரனை வேண்ட, பேரன் சமாதானமானவனாய் அங்கிருந்த ஒரு பெரும்தேங்காயின் கண்ணைத்திறந்து அதன் ஜலத்தை கீழே ஊற்ற, கிழவி அந்த ஜலத்தைக் கயிறாகப் பிடித்துக்கொண்டு மரத்தின் உச்சியில் ஏறினாள். அந்தச்சமயம் அம்மரத்தின் உச்சியில் ஒரு பருந்து வந்து உட்கார்ந்திருந்தது. அது, அப்பொழுதும் இடைவிடாது கிழவியின் தோள்மீது குஸ்திபிடித்துக் கொண்டிருந்த இரண்டு மல்லர்களைக் கண்டதும், பயப்பட்டு, தென்னைமரத்தைவிட்டுப் பறக்கப் புறப்பட்டது. அச்சமயம் அதன் கால் அம்மரத்தின் கிளையின் இலையில் சிக்கிக் கொள்ள, தென்னைமரம் வேரோடு ஆகாயத்தில் கிளம்பியது. அப்பொழுது அம்மரத்தின் வேர் அம்மலையில் நன்றாக ஊன்றியிருந்தபடியால் அம்மலையும் அத்துடன் ஆகாசத்தில் புறப்பட்டது. அப்பொழுது ஆகாய மார்க்கமாய் அப்பருந்து பறந்து போகும்பொழுது அதன் காலில் சிக்கிக்கொண்டிருந்த அந்த தென்னைமரம் அதில் இடைப்பையன், அவனது பாட்டி, அப்பாட்டியின் தலைமீது பன்னிரண்டு பானைகள், அவள் தோள்மேல் குஸ்தி பிடித்துக் கொண்டிருக்கும் நமது மாமண்டூர் முண்டன், காமண்டூர் குண்டன், அத்தென்னைமரத்தின்வேர் ஊன்றியிருந்த மலை, எல்லாம் ஆகாயத்தில் நெடுந்தூரம் பறந்துபோயின. பத்துமாதகாலம் இவ்வாறு பறந்துபோன பிறகு, பருந்தானது காலில் நோய் உடையதாய் காலை உதற, மேற்சொன்ன தென்னைமரம், மலை முதலியனவெல்லாம் அச்சமயம் அங்குள்ள தேசத்தின் ராஜாத்தி ஒருத்தி உப்பரிகைமீது ஸ்நானம் செய்து விட்டு, தலையாற்றிக்கொண்டிருந்தவளுடைய தலையில் விழுந்தது! அவள் என்ன செய்தாள்? இது

ஏதோ சேயக்ராய்த்திப்பி என்று எண்ணி அதைத் தன் சுண்டுவிரல் நுனியினால் எடுத்து எறிந்து விட்டாள்.

அவ்வளவுதான் கதை. இக்கதையைப் படிப்பவர்களுக்கு இதில் ஏதாவது பொய் எனத்தோன்றினால், உடனே ஒரு காகிதத்தை எடுத்து அதில் "கதைக்குக் காலில்லை, பேய்க்குப் புட்டமில்லை" என்று பத்துமுறை எழுதினால் அந்த சந்தேகம் உடனே நிவர்த்தியாகிவிடும்.

அன்றியும், மேற்கண்ட கதையில் மாமண்டூர் முண்டனா, அல்லது காமண்டூர் குண்டனா, அல்லது கிழவியா, அல்லது அவளது பேரப்பிள்ளையா, அல்லது கழுகா, அல்லது ராஜகுமாரியா, யார் மிகவும் சாமர்த்தியமுடையவர்கள் என்பதைப்பற்றி தங்கள் அபிப்பிராயத்தை 1934-ஆம் ௵ மார்ச்சு மாதம், 20-ஆம்தேதிக்குள் இக்கட்டுரை ஆசிரியருக்குத் தெரிவிக்கவும். சரியான விடையளிப்பவருக்கு 1933-௵ ஏப்ரல் மாசம் முதல் தேதி ஒரு பரிசு அளிக்கப்படும். குறிப்பு: தேதியைக் கவனியுங்கள்.

## அரசர்களின் கதை.

### முதற் கதை.

ஐதராபாத் நாட்டை யாளும் நிஜாம் ஒருவர் இருந்தார். அவருக்கு இளவரசனாகிய குமாரன் ஒருவன் இருந்தான். நிஜாம் அவர்கள் மிகவும் தயாள சித்தமுடையவர். அவருடைய குமாரனுக்கு அந்த சிந்தை அவ்வளவாக இல்லை; அன்றியும் கொஞ்சம் லோப குணமுடையவனாயிருந்தான். ஒருநாள் வழக்கம் போல் தந்தையும் தனயனும்பகல் பொழுதில் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். அச்சமயம் உருளைக்கிழங்கினால் செய்யப்பட்ட ஒருபட்சணம் அவர்கள் எதிரில் அரண்மனை சமயற்காரனால் வைக்கப்பட்டது. இருவரும் அதை புசித்துப்பார்த்து மிகவும் நன்றாயிருக்கிறதென்று மெச்சினார்

கள். போஜனம் முடிவதன் முன் நிஜாமினுடைய குமாரன், அப்ப தார்த்தத்தைச் செய்த சமயற்காரனை அழைத்து ஏதோ காதில் ஓதினான். இதை நிஜாம் கவனித்துவிட்டு அச்சமயம் சும்மா இருந்து விட்டார். பிறகு தகப்பனும் பிள்ளையும் விருந்திக்கு போனபின், நிஜாமானவர் அந்தச் சமயற்காரனை வரவழைத்து தன் பிள்ளை என்ன சொன்னான் என்று கேட்க, அவன் அந்த உருளைக்கிழங்கு பட்சணத்தில் மிகுதியாயிருப்பதை இரா போஜனத்திற்கும் தனக் குக் கொடுக்கும்படியாகச் சொன்னார் என்று பதில் உரைத்தான். அதன் பேரில் நிஜாமானவர் தன் பிள்ளைக்கு புத்தி கற்பிக்க வேண்டி, அச்சமயற்காரனிடம் அன்று காலை செய்த உருளைக்கிழங்கு பட்சணத்தை அரண்மனை வழக்கப்படி பெரியவர்களுக்கும் பக்கிரிக ளுக்கும் கொஞ்சமேனும் கொடாதபடி, அன்றிரவு, மறுநாள், அடுத்த நாள், இரண்டு வேளையும் இளவரசனுக்கு கொடுக்கும்படி யாக உத்திரவு செய்தார்.

இரவு தகப்பனும் பிள்ளையும் சாப்பிட்ட பொழுது சமயற் காரன் உத்திரவின்படி அந்த உருளைக்கிழங்கு பட்சணத்தை இள வரசனுக்கு மாத்திரம் படைத்தான். மறுநாட் காலையும் அப்படியே செய்தான். அதற்குள்ளாக அது ஊசிப்போயிற்று, அதன்பேரில் இளவரசன் அச்சமயற்காரன்மீது கோபித்துக் கொள்ள, அதை நிஜாம் ஆனவர் மெல்ல தடுத்து அச் சமயற்காரனையும் மற்ற வர்களையும் சாப்பாட்டு அறையை விட்டுப் போக சொல்லிவிட்டுப் தன் பிள்ளையைப் பார்த்து அடியில் வருமாறு கூறினார். "அந்த சமயற்காரன்மீது கோபித்துகொள்ள வேண்டாம். நான்தான் அந்த உருளைக்கிழங்கு பட்சணத்தை அது ஆகிப்போகும் வரையில் உனக்கே கிடைக்கும்படி கட்டளை யிட்டேன். அப்படி சொன் னது உனக்கு ஒரு புத்திமதி கூறும் பொருட்டே. நாமிருவரும் ராஜ வம்சத்திலுதித்தவர்கள்; அதற்கு தகுந்தபடி நாம் நடந்து கொள்ள வேண்டாமா? மற்ற இழிகுலத்திலுதித்த ஜனங்களைப் போல் நாமும் நடந்தால் கடவுள் நமக்கு இந்த அந்தஸ்து கொடுத்த என்னபலன்? அந்த உருளைக்கிழங்கு பட்சணம் உனக்கு இஷ்டமாயிருந்தால் இரவு அதை மறுபடியும் புதிதாகச் செய்யச் சொல்; உனக்கு சலிக்கிறவரையில் செய்யச்சொல், ஆட்சேபனை

யில்லை; அதை விட்டு ஒருவேளை சமைத்ததை இன்னொருவேளைக்கு வைக்கும்படி சொல்வது நமது அந்தஸ்த்திற்குத் தகுமா? இது எளியவர்கள் செய்யும் வேலையல்லவா? அன்றியும் தினம் ஒவ்வொரு வேளையும் நமக்குச் செய்யப்பட்ட பதார்த்தங்களில் மிகுதி யெல்லாம் பக்கிரிகளுக்கும் ஏழைகளுக்கும் தானமாக வழங்கப்படுவதை நீ அறியாயா? மிகுந்தன வெல்லாம் நமக்காக மற்றொருவேளை வைக்கச்சொன்னால் அவர்கள் ஜீவனம் எப்படி நடக்கும்? இது என் இந்த லோபத்தனம் உனக்கு? வேண்டாம். நமது அந்தஸ்திற்குரிய தயாள குணமுடையவனாயிரு" என்று புத்தி புகட்டினார்.

## இரண்டாம் கதை.

ஐதராபாத் ராஜ்யத்தில், ஒரு நல்ல வழக்க முண்டு; அதாவது நிஜாமானவர் எப்பொழுதாவது யானை மீதேறி பட்டணத்தைச் சுற்றி பவனி வந்தால், அவர் உட்கார்ந்திருந்த யானை மீதிலுள்ள ஹௌதாவில், இரண்டுபக்கமும் பொன், வெள்ளி, செப்பு நாணயங்கள் நிரப்பிய இரண்டு பைகள் வைக்கப்பட்டிருக்கும். அவர் ஊரைச் சுற்றி வரும்பொழுது எளியவர்கள் யாராவது அவரது கண்களுக்_புலப்பட்டால் இந்த நாணயங்களை அவர்களுக்கு வாரி இறைப்பது நிஜாம்வழக்கம். பல வருடங்களாக இது மாமுலாய் நடந்து வந்தது. ஒரு முறை ஒரு பண்டிகை தினம் நிஜாம் அவர்கள் நகரத்தை சுற்றி பவனி வரவேண்டியிருக்க, அன்றைத்தினம் நிஜாமவர்களுக்கு ஏதோ உடம்பு அசௌக்கிய மாயிருக்க, தன் குமாரனாகிய இளவரசனை தனக்குப்பதிலாக பவனி வரும்படி உத்திரவு செய்தார். அதன் பேரில் இளவரசன் அன்று சாயங்காலம் பட்டத்து யானை மீது பவனி வந்தார். அன்றிரவு பவனி வந்ததில் ஏதாவது விசேஷமுண்டோ என்று நிஜாம் அவர்கள் தன் மந்திரிகள் ஒருவரை வினவ, அவர் "வேறொன்றும் விசேஷமில்லை. இளவரசர் வழக்கத்தைப்போல் எளியவர்களுக்கும் பக்கிரி முதலியவர்களுக்கும், ஒன்றும் வழங்க வில்லை. பணப்பைகள் புறப்பட்ட போது இருந்த ஸ்திதியிலேயே திரும்பி அரண்மனைக்கு வந்து சேர்ந்தன" என்று உண்மையைக் கூறினார். உடனே நிஜாம் அவர்கள் அம்மந்

திரியிடம், வருகிற மாசம் முதலில், வழக்கப்படி இளவரசருக்கு கை செலவிற்காக அரண்மனை கஜானாவிலிருந்து கொடுக்கும் பொன்னைக் கொடுக்காமல் நிறுத்திவிடு—இது என் ஆக்கினை'' என்று கட்டளை யிட்டார். அவ்வாறே அம்மந்திரி செய்ய, இளவரசர் இதைக் கேள்விப்பட்டு அம்மந்திரியிடம் போய், "ஏன் இந்த மாசம் என் கைசெலவுக்கு பொன்னை எனக்குக் கொடுக்கவில்லை?'' என்று கோபித்துக் கேட்க, அவர் 'நிஜாம் அவர்கள் உத்திரவு அப்படி'' என்று பதில் உரைத்தார். அதன் பேரில் மிகுந்த கோபமும் விசன முடையவனாய் இளவரசர், தந்தையாகிய நிஜாமிடம் சென்று "எனக்குக் கொடுக்கும் மாதாந்தரத் தொகையை நிறுத்தும்படி கட்டளை யிட்டீர்களாமே உண்மைதானா?'' என்று வினவ நிஜாம் ஆனவர் அடியில் வருமாறு பதில் உரைத்தார். "ஆம் உண்மை தான்; அதற்குக் காரணம் சொல்லுகிறேன் கேள். சில தினங்களுக்கு முன்பாக எனக்குப் பதிலாக நகர் வலம்வரும்படி உன்னை நான் அனுப்பிய பொழுது, எளியவர்களுக்கும் பக்கிரிகள் முதலியோருக்கும் வழக்கப்படி தானம் செய்ய வைத்திருந்த இரண்டு பைப் பணத்தையும் ஒருகாசும் செலவிடாது மறுபடியும் அரண்மனைக்குக் கொண்டுவந்து சேர்த்த உனக்கு, செலவுக்குப் பணம் எதற்கு? உனக்கு எது வேண்டுமென்றாலும் அரண்மனையினின்றும் கொடுக்கப்படுகிறது. வேறு செலவு உனக்கில்லை என்று கண்டறிந்தவுடன் அதைத் நிறுத்தச் சொன்னேன்'' என்று கூறி, வாடிய முகத்துடன் நின்ற இளவரசரைப்பார்த்து மறுபடியும் இவ்வாறு புகன்றார்; "அப்பா குழந்தாய், நமக்கு இந்த ராஜ்யத்தை அல்லா அருளியிருப்பது நம்முடைய சுய நன்மைக்காக வல்ல, நமக்குக் கீழ்ப்பட்டிருக்கும் எல்லாஜனங்களின் பொது நன்மைக்காகவென்பதை உறுதியாய் நம்பு. நம்முடைய பொக்கிஷத்திலுள்ள பணமெல்லாம் நம்முடையதல்ல, நம்முடைய ஜனங்களுடையது, ஆகவே அவற்றை யெல்லாம் கூடுமானவரையில் அவர்கள் நன்மைக்காகச் செலவழிக்க வேண்டும், அன்றியும் நிஜாம் இன்று ஊர்கோலம் வருகிறாரென்றால் எத்தனை ஆயிரம் எளியவர்கள் தங்களுக்கு ஏதோ லாபம் கிடைக்குமென்று எதிர்பார்த்திருப்பார்கள். அவர்கள் கோரிக்கையை யெல்லாம் பாழாக்கி, பணப்பைகளை மறுபடியும் அரண்மனையில் சேர்ப்பதற்

காகவா உன்னுடன் இரண்டு பணப்பைகள் அனுப்பப்பட்டன? நம்முடைய ராஜ்யத்தில் நாம் தானம் கொடுக்காவிட்டால் மற்றுயார் செய்வார்கள்? இவைகளை யெல்லாம் நன்றாய் யோசித்துப் பார்த்து இனியாவது இந்த லோப குண 'மில்லாதிரு'' என்று சொல்லி, மந்திரியை வரவழைத்து இம்மாத முதல் இளவரசனுக்கு இரட்டிப்பாக மாதாந்திர செலவுக்குக் கொடும் என்று உத்திரவு செய்தார்.

## மூன்றும் கதை.

மேற்சொன்ன கதை நடந்த சில மாதங்களுக்குப் பிறகு இளவரசர், ஏழைகளுக்கு தானம் கொடுப்பதில் பாத்திரா பாத்திரம் அறியாது கொடுக்கிறார் என்று கேழ்விப்பட்டவராய் நிஜாம் அவ்விஷயத்திலும் தன் குமாரனுக்கு புத்தி புகட்ட வேண்டுமென்று சமயம்பார்த்திருந்தார். ஒருநாள் அரண்மனை வாயிலிலிருந்து வெளி நாட்டு பக்கிரி ஒருவன் தன் கையில் ஒரு செப்பு குடமொன்றை வைத்துக்கொண்டு "இது நாகூர் மீரா சாயபு அவர்கள் கைங்கரியத்திற்காக, இச்செப்புக்குடம் நிரம்ப வெள்ளி வழங்கும் தாதா இவ்வூரில் யாராவது இருக்கிறார்களா?'' என்று கூவினன். இதை நிஜாமும் அவர் குமாரனும் கேட்டார்கள். இம்மாதிரியாகவே நான்கைந்து தினங்கள் அப்பக்கிரி கத்துவதைக் கேட்ட இளவரசன் தந்தையிடம் ஒருநாள், "தினம் ஒரு பக்கிரி இப்படி கத்துகிறாரே, இவருக்குத் தாங்கள் அவர் வேண்டிய வெள்ளியை கொடுக்கலாகாதா?'' என்று கேட்க, மேல்மாடியினின்றும் அப்பக்கிரியின் முகக்குறிப்பையும் அவன் செய்கைகளையும் கவனித்த நிஜாமானவர் "இவனை நோக்குமிடத்து இவன் வாஸ்தவமாக தர்ம சிந்தை யுடையவனுகக் காணேம், ஆயினும் இவனைப் பரிசோதித்துப் பார்ப்போ'' மென்று சொல்லி ஒரு ஜவானை அனுப்பி அப்பக்கிரியை அரண்மனைக்குள் தன் எதிரில் அழைத்து வரும்படி கட்டளையிட்டார். பக்கிரி தன் எதிரில் வந்து சலாம் செய்தவுடன், அவனை உட்காரச்செய்து, அவன் எந்த தேசம் முதலிய கேள்விகளை யெல்லாம் கேட்டபின்னர், பக்கிரியாயிருக்கும் உமக்கு வெள்ளி என்னத்திற்கு என்று வினவ, "எனக்

காக ஒரு காசும் வேண்டாம், நாகூர் மீராசாயபு அவர்கள் தர்காவுக்கு (கோயிலுக்கு) கைங்கர்யம் செய்வதாக பிரார்த்தித்துக்கொண்டேன் சிலநாளைக்கு முன்பாக, அதற்காக நான் பிச்சை எடுக்கிறேன் என்று பதில் சொன்னான் "எவ்வளவு பிரார்த்தனை செலுத்தவேண்டியது' என்று நிஜாம் கேட்க, இக் குடம் நிரம்ப வெள்ளி, அதற்குமேல் எனக்கு ஒரு காசும் வேண்டாம் என்று பதில் உரைத்தார் பக்கிரி. அதன்மீது நிஜாம் அவர்கள் ஒரு அரண்மனை உத்யோகஸ்தனை அழைத்து அவன் காதில் ஏதோ ரகசியமாய்க் கூறினார். அந்த உத்யோகஸ்தர் வெளியேபோய் சில பைகளில் வெள்ளி ஹாலிசிக்கா (ஐதராபாத் நாணயம்) ரூபாய்களை நிரப்பிக்கொண்டு வந்தான்; பிறகு பக்கிரி தன் ருமாலை (தளுவத்தை) பரப்பி, அதன் மீது தன் கையிலிலிருந்த குடத்தை நடுவில் வைக்க அரண்மனை உத்யோகஸ்தன் பைபையாக ரூபாய்களை அக்குடத்தில் கொட்டினான். குடமானது நிரம்பி சில நாணயங்கள் தளுவத்திலும் விழுந்தன. நிஜாமானவர் பக்கிரியை அவன் குடத்தை எடுத்துக்கொண்டு போகும்படி உத்திரவு செய்ய, பக்கிரி தளுவத்தின் நான்கு மூலைகளையும் சேர்த்து குடத்தின் மீது கட்டி அதில் வீழ்ந்த ரூபாய்களையும் சேர்த்து எடுத்துக்கொண்டு நிஜாம் அவர்களுக்கு சலாம் செய்து விட்டு அறையை விட்டுப் போனான். நிஜாமானவர் அவன் அரண்மனை வாயிலைத்தாண்டுகிறவரை பொறுத்திருந்து உடனே இரண்டு சேவகர்களை அனுப்பி அந்தப் பக்கிரியை கைப்பிடியாகப் பிடித்துக் கொண்டு வரும்படி உத்திரவு செய்தார். பக்கிரி இன்ன காரணம் என்று அறியாதவனாய் நிஜாம் எதிரில் வந்து நின்றான்; உடனே அவர் அவனைப் பார்த்து "நீ நிஜமான பக்கிரியல்ல! ஏதோ பக்கிரி வேஷம் போட்டுக்கொண்டு திரிகிறவன் நீ! வாஸ்தவமாய்ப் பக்கிரியாயிருந்தால் உனக்கு பொன்னாசை இராது, நீ நாகூர் கோவிலுக்காக வேண்டியதெல்லாம் உன்குடம் நிரம்ப ரூபாய்தானே, அதற்குமேல் ஒரு காசும் வேண்டாமென்று கூறிவிட்டு, குடத்தின் மீது வழிந்த ரூபாய்களையும் எல்லாம் எப்படி கட்டிக்கொண்டு போனாய்? உண்மையைச் சொல்லுகிறாயா என்ன?" என்று பயமுறுத்த, லோபி பக்கிரியானவன், நிஜாம் அவர்கள் காலில்விழுந்து அவர் கூறியது வாஸ்தவம் என்று ஒப்புக்கொண்டு, தனக்கு ஜீவனோபாயம் வேறு

இல்லையானபடியால், இப்படி வேடம் பூணும்படி நேர்ந்ததென்று சொல்லி எப்படியாவது நிஜாம் அவர்கள் தன்னை மன்னிக்க வேண்டுமென்று கண்ணீருடன் கேட்க, நிஜாம் அவர்கள் அவனை மன்னித்து ஏதோ கொஞ்சம் ரூபாய்கள் சிலவிற்காக கொடுத்து தன் நாட்டிலிருக்க கூடாதென்று உத்திரவு பண்ணி அனுப்பி விட்டார். பிறகு தன் அருகிலிருந்து எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த இளவரசனைப் பார்த்து "அப்பா, தானம் செய்வதிலும் தக்க பாத்திரம் அறிந்து தானம் செய்யவேண்டு" மென்று புத்தி புகட்டினார்.

---

## நான்காம் கதை.

மைசூர் நாட்டில் அரசாண்டு வந்த உடையார்களை அடக்கி அவர்கள் கையின்கீழ் ஒரு சிறு தளகர்த்தராகவிருந்த ஹைதர் என்பவன், தானே அந்த ராஜ்யத்திற்கு அரசனானார் என்பது எல்லோரும் அறிந்த விஷயமே. அந்த ஹைதருக்கு ஐந்தாறு பாஷைகள் நன்றாய்ப் பேசத்தெரிந்த போதிலும் எந்த பாஷையையும் எழுதப் படிக்கத் தெரியாது. மைசூர் அரசனானபின் பல சமயங்களில் தனது ஆக்கினைகளை மற்றவர்களுக்குத் தெரிவிக்கவேண்டி வந்த பொழுது அவர் 'பர்மான்' (Firman) ராஜசட்டளைகளுக்கு கையெழுத்து போடவேண்டி வந்தபொழுது இங்கிபுட்டியில் பேனை வைத் தொட்டு, உத்திரவின் கீழ் தன் கையெழுத்துக்குப்பதிலாக O இப்படி கைநாட்டு செய்வது அவர் வழக்கமாயிருந்தது. ஹைதர் ஆலியின் குமாரன் டிப்பு என்று ஒருவன் இருந்தார். ஹைதர் தான் படிப்பாளியாயில்லா விட்டாலும் தனக்குப் பின் மைசூர் நாட்டை ஆளவேண்டிய டிப்புவிற்கு, பல உபாத்தியாயர்களைக் கொண்டு இரண்டு மூன்று பாஷைகளில் கல்வி பயிற்றுவித்தார். டிப்புவிற்கு தான் மிகவும் படித்தவன் என்றும் தன் தகப்பனுக்கு ஒன்றும் தெரியாதென்றும் கர்வம் உண்டு. ஒரு சமயம் ஹைதர் ஆலி வெளியூருக்கு அனுப்பவேண்டிய ராஜ கட்டளை யொன்றில் வழக்கப்படி மேற் சொன்ன மாதிரி பேனாவினால் சுழித்து வைக்க, அருகிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த இளவரசனான டிப்பு

அதைப்பார்த்து நகைத்தான். உடனே ஹைதருக்கு கோபம் வந்த போதிலும், ஏக புத்திரனாகையால் அவன் மீதுள்ள பிரியத்தினால் அதை அடக்கிக்கொண்டு, அவனுக்கு புத்தி புகட்ட வேண்டி அடியில் வருமாறு கூறினார் ஹிந்துஸ்தானி பாஷையில், "கிதர் தேக்தா பேட்டா? உதர்தேக்." இதற்குப் பொருள் தமிழ் பாஷையில் "எங்கே பார்க்கிறாய் பையா? இங்கே பார்!" என்பதாம்; இவ் வார்த்தைகளைக் கூறிடபொழுது, தன் விரலினால் தன் மண்டையைச் சுட்டிக்காட்டிய படியால், இதற்கு அர்த்தம் "கையெழுத்தை ஏனடா அப்பா பார்க்கிறாய்? தலையெழுத்தைப் பார்" என்று கூறியதாகும். ஹைதர் ஆதி கூறியதற் கிசைய ஹைதர் முதலில் ஒன்றுமில்லாதவனாயிருந்தும், கடைசியில் மைசூர் அரசனானான்; டிப்புவோ அரசனது குமாரனாயிருந்தும் ராஜ்யத்தை இழந்தவனானார். ஆங்கிலத்தில் "ஹைதர் ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்தான், டிப்பு அதை அழித்தார்" என்று ஒரு பழமொழியுண்டு.

## கதை சொல்லுகிறவர் கதை.

எனக்குச் சுமார் ஏழெட்டு வயதிருக்கும் பொழுது ஒரு முறை என் தகப்பனார் என்னையும் என் சகோதர சகோதரிகளையும் மதுரைக்கு என் சிறிய தகப்பனார் வீட்டிற்கு அனுப்பினார். அப்போது பள்ளிக்கூட வெயிற்கால விடுமுறை. அச்சமயம் என்சிற்றப்பா எங்களுக்கு பொழுது போக்காக, அவ்வூரிலிருந்த ஒரு பிராம்மணரை வரவழைத்துத் தினம் காலையில் கதை சொல்லும்படி நியமித்தார். அவர் வயோதிகர்; கண் தெரியாதவர்; அவருடைய குமாரனோ அல்லது பந்துவோ ஒருவர் அவரைக் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு வந்து எங்களுக்குக் கதை சொல்லுகிற இடத்தில் உட்கார வைத்துவிட்டு, வெளியே சென்று தன் வேலையெல்லாம் பார்த்துக்கொண்டு, கதை முடிந்தவுடன் அந்த பிராம்மணரைக் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு போவார். இந்தக் கதை சொல்லும் வயோதிக பிராம்மணர் பெயர் எனக்குத் தெரியாது. அவ

ரது பட்டப் பெயர் மாத்திரம் எனக்கு இப்பொழுதும் நன்றாக ஞாபகமிருக்கிறது; அதாவது 'கதா சரித்சாகர ஐயர்' என்பது. இவருக்கு இப் பட்டப் பெயர் இவரது நண்பர்களால் கொடுக்கப் பட்டதாம். இவருக்கு எத்தனையோ ஆயிரம் கதைகள் தெரிந்திருக் கலாம். நாங்கள் மதுரையிலிருந்த இரண்டு மூன்று வாரங்களும் இவர் வாயினின்றும் கேட்ட கதை ஒன்றேயாம்! அது எப்படி என்று இதை வாசிக்கும் நண்பர்கள் அறிய விரும்பலாம். ஆகவே இதைச் சற்று விபரமாகச் சொல்லுகிறேன்.

இவர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தவுடன் சிறுவர்களாகிய நாங்களெல்லாம் எதிரில் கதைகேட்க ஒரு பெஞ்சியில் உட்காரு வோம். உடனே இவர், "அங்க, வங்க, கலிங்க, குலிங்க, காஸ்மீர, மச்ச, மகத......என்று ஐம்பத்தாறு தேசங்களின் பெயரையும் ஒன்றுவிடாது ராகத்துடன் சொல்லி, '.......என்கிற ஐம்பத்தாறு தேசங்களில் ஒன்றாகிய அங்க தேசத்தில் ஓர் ஊரில் ஒருவன் இருந் தானாம். அவனுக்கு நான்கு பேர் பிள்ளைகள் இருந்தார்களாம். அவர் களின் பெயர் கால்திருடன், அரைத் திருடன், முக்கால் திருடன், முழுத்திருடன் என்பதாம்......'' என்று ஆரம்பித்து, அந் நான்கு திருடர்கள் முறையே பக்கத்து ஊரிலுள்ள கொத்தவால், தாசி, மந்திரி, அரசன் நால்வரையும் வஞ்சித்த கதையை முதல் நாள் சொல்லி முடித்தார். அக்கதையை அதுவரையில் கேட்டிராத எங்களுக்கு அது மிகவும் அதிசயமாகவும் ஆச்சரியமாகவும் இருந் தது. (அக்கதையை நான் இங்கே எழுத வேண்டியதில்லை. என் நண்பர்கள் கதைப்புத்தகங்களில் சாதாரணமாக படித்திருக்கலாம்.)

மறுநாள் இவர் தெருவண்டை வரும் பொழுதே நாங்கள் ஆவலுடன் ஓடிப்போய் எங்கள் பெஞ்சியில் உட்கார்ந்து கொண் டோம். அவர் வந்தவுடன், வழக்கம்போல், "அங்க, வங்க, கலிங்க, குலிங்க,....'' என்று ஐம்பத்தாறு தேசங்களின் பெயர்களையும் சொல்ல ஆரம்பித்தார். நாங்கள், "தாதா, தாதா! இதையெல் லாம் விட்டு விட்டுக் கதையை ஆரம்பியுங்கள் தாதா'' என்று கூச்சலிட்டோம். "குழந்தைகளே, பொறுங்கள்! பொறுங்கள். கதை யைச் சரியாகத்தானே சொல்லிக்கொண்டு வரவேண்டும்?'' என்று

சொல்லி, ஒன்றை விடாது அந்த ஐம்பத்தாறு தேசங்களின் பெயர்களையும் கூறி, பிறகு, "அங்க தேசத்தில், ஓர் ஊரில்......" என்று ஆரம்பித்து முன்னால் சொன்ன கதையை திரும்பவும் சொல்லத் தொடங்கினார். சிறுவர்களாகிய நாங்கள் ஒருவரை ஒருவர் விழித்துப் பார்த்துவிட்டு பழங்கதையையே கேட்டுக் கொண்டிருந்தோம்.

மறுநாள் அவர் வந்தபோது, எங்களில் கொஞ்சம் தைரியசாலியான என் தமயன், "தாதா, தாதா! இன்றைக்கு அந்த அங்க தேசத்து கதைவேண்டாம். வேறு ஏதாவது புதிய கதை சொல்லுங்கள்" என்று கேட்டார். அதற்குக் கதா சரித்சாகர ஐயர், "அப்படியே ஆகட்டும் தம்பி" என்று சொல்லிவிட்டு, முன்போல் அந்த ஐம்பத்தாறு தேசங்களின் பெயர்களையும் சொல்லி, "...... இந்த ஐம்பத்தாறு தேசங்களில் ஒன்றாகிய வங்க தேசத்தில்...... என்று தொடங்கவே நாங்களெல்லாம் சந்தோஷத்தினால் கண்களை சிமிட்டிக்கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தோம். உடனே கதை சொல்கிறவர், "வங்கதேசத்தில் ஒருவன் இருந்தானாம். அவனுக்கு நான்கு பேர் பிள்ளைகள், கால் திருடன்......" என்று பழைய கதையையே மறுபடியும் எங்களைக் கேட்கச் செய்தார்.

"இதென்னடா கஷ்டமாயிருக்கிறதே!" என்று அன்றும் இக்கதையைக் கேட்டுவிட்டு, மறுநாள் அதிகாலையில் நாங்கள் எழுந்தவுடன் வேறொரு யுக்திசெய்து எனது மற்றொரு அண்ணனைக் கொண்டு, கதைசொல்லுகிற பிராம்மணர் வந்தவுடன், "தாதா, இன்றைக்கு அந்த திருடர்கள் கதை வேண்டாம். ஏதாவது ராஜா கதை சொல்லுங்கள்" என்று கேட்கச் செய்தோம்.

அவர் "அப்படியே ஆகட்டும் தம்பி" என்று ஒப்புகொண்டு, "அங்க வங்க......" என்று ஆரம்பித்து 'கலிங்க தேசத்தில் ஒரு ராஜா இருந்தானாம், அவன் ஒரு நாள் ராத்திரி நகர் பரிசோதனை செய்துகொண்டு வரும் பொழுது ஒரு திண்ணையில் ஒருவன் உட்கார்ந்து கொண்டிருந்தானாம். அவனுக்கு நான்கு பிள்ளைகள். அவர்களின் பேர், கால் திருடன்' அரைத் திருடன்......" என்று பழைய கதையையே ஆரம்பித்தார் மறுபடியும்.!

இன்னும் இரண்டு மூன்று நாட்கள் "வேறுகதை சொல்லுங்கள்" என்று நாங்கள் எவ்வளவு மன்றாடியும் வேறு ஏதோ புதிய கதை சொல்லுவதுபோல் ஆரம்பித்து, பிறகு எப்படியாவது நான்கு திருடர்கள் கதையைக் கொண்டு வந்து முடிபோட்டு அதையே சொல்லி முடித்துக்கொண்டு வந்தார். எத்தனை நாட்கள்தான் இதைப் பொறுப்போம்? கடைசியாக நான் ஒரு யுக்தி செய்தேன். என் அண்ணன்மார்கள் முதலியவர்களையெல்லாம் அழைத்து, "இன்று கதை ஐயர் வந்தவுடன், கதை கேட்பதுபோல் போய் உட்கார்ந்து, அவர் கதைசொல்ல ஆரம்பித்தவுடன் மெல்ல நாமெல்லாம் சந்தடி செய்யாமல் தோட்டத்திற்குப் போய் விளையாடிக்கொண்டிருப்போம். கதை முடிகிறசமயம் பார்த்து, மெல்ல வந்து உட்கார்ந்து, கதை மிகவும் நன்றாய் இருக்கிறது தாதா; இதே கதையை நாளைக்கும் சொல்லுங்கள்' என்று சொல்லி அனுப்பிவிடுவோம்" என்று சொன்னேன். அதற்கு அவர்களெல்லாம் இசையவே, கதை ஐயர் வந்தவுடன் ஆரவாரத்துடன் போய் உட்கார்ந்து, கதை ஆரம்பித்தவுடன் சந்தடி செய்யாமல், எல்லோரும் நழுவிப்போய்த் தோட்டத்தில் விளையாடினோம். அரைமணி பொறுத்து வந்து உட்கார்ந்து, "கதை மிகவும் நன்றாயிருக்கிறது" என்று சொல்லி அவரை வீட்டிக்கு அனுப்பி விட்டோம்.

இம்மாதிரியாக இரண்டு மூன்று நாட்கள் அவர் காலி பெஞ்சுகளுக்குக் கதை சொல்லிக் கொண்டு வந்தார். அவருக்குக் கண் தெரியாது என்று முன்பே சொல்லியிருக்கிறேன். அதனால் அவருக்கு நாங்கள் செய்த சூது தெரியாது. ஒரு நாள் அவரை வீட்டிற்கு அழைத்துகொண்டுபோகவேண்டியவர் ஏதோ தற்செயலாகத் தன் காரியங்களைச் சீக்கிரம் முடித்துக்கொண்டு வந்து பார்க்க, கதாசரித்சாகர ஐயர் ஒருவருமில்லாத பெஞ்சுகளுக்குக் கதை சொல்லிக்கொண்டிருந்ததைக் கண்டுவிட்டார்! உடனே அவரிடம் நாங்கள் செய்த சூதைத் தெரிவித்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். ஏனெனில் கதை சொல்லுகிற ஐயர் கோபத்தோடு என் சிறிய தகப்பனாரிடம் முறையிட, அவர் எங்களையெல்லாம் வர

வழைத்து, "இந்த யுக்தி யாரடா செய்தது?" என்று விசாரித்தார். என் உடன் பிறந்தோர்களெல்லாம், "சம்பந்தம்தான் சொல்லிக் கொடுத்தான்" என்று உண்மையை கூறிவிட்டார்கள். அதன் பேரில் மற்றவர்களையெல்லாம் அனுப்பிவிட்டு, பிரம்பொன்று வைத்திருக்கும் தம்முடைய அறைக்கு என்னை அழைத்துக் கொண்டு போனார். "இன்றைக்கு நமக்கு நல்ல பூசை கிடைக்கப் போகிறது" என்று நான் பயந்துகொண்டு போனேன். போனதும் கதவைச் சாத்திவிட்டு, "ஏனடா இப்படிச் செய்தாய்?" என்று என்னை கேட்க, "நீங்கள் கோபித்துக் கொள்ளாதீர்கள், சின்ன நாயனா! தினம் ஒரே கதையை எத்தனை நாள் கேட்கிறது நாங்கள்?" என்று சொல்லி நடந்த வரலாற்றை யெல்லாம் அவருக்கு எடுத்துக் கூறினேன். அதன்பேரில் அவர் அடங்காச் சிரிப்புக்கொண்டு சிரித்தார்! அவரது கோபமும் போய்விட்டது; எனக்கு பிரம்படியும் விழவில்லை.! இனிமேல் அந்தமாதிரி செய்யாதே, போ! என்று சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டு என்னை அனுப்பிவிட்டார்.

அவர் அப்பொழுது சிரித்த சிரிப்பு இப்பொழுதும் எனக்கு ஞாபகமிருக்கிறது. இதை வாசிக்கும் நண்பர்களும் அவர் சிரிப்பில் ஒரு பாகமாவது சிரிப்பார்கள் என்று எண்ணி இதை எழுதலானேன்.

முற்றிற்று.